

# ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டி

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு

ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டி

| | |
|---|---|
| முதற் பதிப்பு | : 2005 மே |
| ISBN | : 955-8037-85-0 |
| வடிவமைப்பு | : சுகந்தி மணிமாறன் - 2330071 |
| அச்சு | : க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ் |
| வெளியீடு | : மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் |


## தொகுப்பு

*உவிந்து குருகுலசூரிய*
*சுனந்த தேசப்பிரிய*
*எஸ். நயன கணேசன்*

## அட்டைப்படத்தின் புகைப்படம்

*புகைப்பட ஊடகவியலாளரொருவர் 2005ஆம் ஆண்டு மே மாதம் பேருவில் இடம்பெற்ற கலகம் ஒன்றின் போது கண்ணீர் புகைத் தாக்குதலுக்கு மத்தியில் புகைப்படம் எடுத்தல்.*
*படம் : AP/ மார்ட்டின் மேஜியா*

## பின்புற அட்டையின் புகைப்படம்

*ஊடகவியலாளர் நிமலராஜனின் படுகொலைக்கு எதிராக ஊடகவியலாளர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டமொன்று*
*படம் : அஜித் செனவிரத்ன*

*யுனெஸ்கோ நிறுவனத்தின் மூலமே இந்நூல் தொகுப்பிற்கும் மொழிபெயர்ப்புச் செயற்பாடுகளுக்கும் அனுசரணை வழங்கப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள கருத்துக்கள் யுனெஸ்கோ நிறுவனத்தின் கருத்துக்கள் அல்ல. இது தொடர்பான பொறுப்பு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கே உண்டு. அனைத்து எழுத்தாக்கங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள பதவிப் பெயர்கள் மற்றும் உள்ளடக்கத்தின் மூலம் முன்வைக்கப்படும் கருத்துக்கள் யுனெஸ்கோவின் கருத்துக்கள் அல்ல.*

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆபத்தான சூழ்நிலைகளில் வேலை செய்வதற்குத் தயாராகுதல் | 1 |
| ஜெனீவா மாநாட்டு ஒப்பந்தம் | 8 |
| பொதுவான பாதுகாப்பு பற்றிய அறிவுறுத்தல்கள் | 16 |
| பாதுகாப்பு தொடர்பான உடன்பாட்டு வாசகம் | 23 |
| யுத்த வலயங்களும் மோதல் பிரதேசங்களும் | 26 |
| மிதிவெடிகள் மற்றும் சிறு பொறிகள் | 28 |
| கலவரங்களும் உள்நாட்டு அமைதியின்மையும் | 39 |
| ஊடக சுதந்திரமும் உயிர் வாழ்வதற்கான உரிமையும் | 46 |



*மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்*
*24/2, 28வது ஒழுங்கை, ப்ளவர் வீதி, கொழும்பு - 07, இலங்கை*
*தொலைபேசி : 2565304, 2565306, 5552746, 5552748*
*தொலைநகல் : 4714460*
*மின்னஞ்சல் : cpa@sri.lanka.net*
*இணையத்தளம் : www.cpalanka.org*

# முன்னுரை

கடந்த 13 வருட காலப்பகுதிக்குள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் முழு உலகத்திலும் 1250ற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2004ஆம் ஆண்டில் மட்டும் 129 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஏனெனில் அவர்கள் எழுதியவை கூறியவை தொடர்பாக ஒருவர் விருப்பமில்லாதிருந்தமையினாலாகும்; ஒருவர் ஆராயக் கூடாது என நினைத்ததை ஆராய்ந்தமையினாலாகும்; ஒருவர், ஊடகவியலாளர்களை விரும்பாமையினாலாகும். தவறான நேரத்தில் தவறான இடத்தில் இருந்த காரணத்தினாலாகும்.

எந்தவொரு தொழிலிலும் ஆபத்து உள்ளது. ஆனால் ஒருவர் மறைக்கப்பட வேண்டும் என நினைக்கும் ஒரு விடயத்தை பகிரங்கப்படுத்தும் ஊடகவியலாளர்களின் தொழில் ஏனைய தொழில்களை விட மிகவும் ஆபத்தானது. இன்று இவ் ஆபத்து ஏற்றுக் கொள்ள முடியாதளவிற்கு அதிகரித்துள்ளது. உலகின் சில பிரதேசங்களில் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல் விடுத்தல் போன்றவை கைவிட முடியாதளவிற்குத் தொழிலின் ஓர் அங்கமாக அமைந்து விட்டது. யுத்தம் மற்றும் சிவில் மோதல்களை அறிக்கையிடும் பொழுது அங்கு அதன் ஆபத்து மிகவும் அதிகரிப்பதுடன் ஊடகவியலாளர்கள் தமது உயிரைக் கூட இழக்க நேரிடுகிறது.

எனவே ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பான விளக்கம் பற்றிய தெளிவு தேவைப்படுகின்றது. தமது தொழிலை சிறப்பாக செய்வதற்கு இது அத்தியாவசியமானதாகும். சிறந்த ஊடகவியலாளர்கள் நேர்காணல் மற்றும் ஆராய்ச்சித் திறமைகளை வளர்த்துக் கொள்வதனைப் போன்று பாதுகாப்பு தொடர்பான திறமைகளையும் வளர்த்துக் கொள்கின்றனர். பாதுகாப்பு என்பது எதிர்காலம் தொடர்பாக சிந்தித்தலும், தாயராகுதலும், என்ன நடைபெறுகிறது என்பதனை கண்காணிப்பதுமாகும். ஊடகவியலாளர்களின் கடமை கதை கூறலே தவிர கதையாக மாறுவதல்ல.

இந்த நூலின் நோக்கம். பாதுகாப்பு பற்றியும் பாதுகாப்பற்ற தன்மை பற்றியும் விபரிப்பதல்ல. இதன் நோக்கம் ஊடகவியலாளர்களுக்கு தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் பாதுகாப்புத் தொடர்பான மேலதிகத் தகவல்கள் மற்றும் திறமைகளை வளர்த்துக் கொள்ளவது தொடர்பாக விளக்கமொன்றினை வழங்குவதாகும்.

இந்நூல் "Practical guide for journalists" என்ற "யுனெஸ்கோ" நிறுவனத்தின் நூலையும் "எல்லைகளற்ற பத்திரிகையாளர்" அமைப்பின் மூலம் பிரசுரிக்கப்பட்ட ஆவணங்களையும் சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தினால் பிரசுரிக்கப்பட்ட "Survival guide for journalists" என்ற புத்தகத்தின் உதவியுடனும் இலங்கைக்குத் தேவையான விதத்தில் தொகுக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என பரிந்துரைக்கப்பட்ட சகல காரணிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இலங்கையின் ஊடகவியலாளர்களுக்கும், ஊடக தொழிற்துறையினர்களின் அமைப்புக்கள் மற்றும் ஊடக உரிமையாளர்களுக்கு விளக்கமொன்றினை வழங்குவது சிறந்தது என நாம் நினைக்கின்றோம்.

**உவிந்து குருகுலசூரிய**

# ஆபத்தான சூழ்நிலைகளில் வேலை செய்வதற்கு தயாராகுதல்

யுத்தச் சூழலிலே ஊடகவியலாளர்கள் வேலை செய்யும் போது துப்பாக்கிகள், குண்டுகள், ரொக்கட் வெடிகள், எறிகணைகள் மற்றும் ஏனைய வெடி பொருள் சாதனங்களால் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம். ஆனால் யுத்தச் சூழலைவிட பரந்த வன்முறை சூழல் ஒன்றில் ஊடகவியலாளர்கள் பல ஆபத்துக்களை எதிர்நோக்குகின்றனர். மரபு ரீதியான யுத்தச் சூழ்நிலையில் வேலை செய்யும் ஊடகவியலாளரை விட, வன்முறை ஆர்ப்பாட்டங்கள், அல்லது பொதுக் கலவரங்கள் மத்தியில் வேலை செய்யும் ஊடகவியலாளருக்கு உடல் ரீதியான ஆபத்து அதிகம். அதே போன்று அவருடைய தலைமையகத்தின் உதவியின்றி வெளியே தனியாக வேலை செய்யும் ஊடகவியலாளர்களுக்கும் பின்வரும் ஆபத்துக்கள் உண்டு.

- சுகயீனம்
- பயணத்தின் போதும் ஏனைய திடீர் விபத்துகளும்
- வன்முறைகள், அல்லது ஊடகத்தை குறிவைத்த வன்முறை
- பாதுகாப்பற்ற சூழ்நிலை
- அதிகம் களைப்படைதல்
- மனக் கவலைகள் மற்றும் வேலை செய்ய ஊக்கமில்லாமை

யுத்தங்களில் கொல்லப்படுகிற அல்லது காயப்படுகிற ஊடகவியலாளர்களை விட அதிகமான ஊடகவியலாளர்கள் நோயினாலும் வீதி விபத்துக்களினாலும் பாதிக்கப்படுகின்றார்கள். காய்ச்சலினாலோ அல்லது உணவு விஷத்தாலோ சுகவீனமடையும் ஊடகவியலாளரினால் பணியாற்றவோ ஆவணங்களை அச்சகத்திற்கு அனுப்பவோ முடியாது. யுத்தகளத்தில் எடுக்க வேண்டிய துணிகர முடிவுகள் போல் இல்லையென்றாலும் ஏனைய துணிகர முடிவுகளை எடுக்க முடியாத நிலையிலிருப்பர். வன்முறை என்பது எதிர்பாராத திசைகளிலிருந்து அவர்களுக்கு வரலாம். உதாரணமாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வன்முறை செயற்பாடுகளாக மாறி பொதுமக்கள் தமது விரக்தியை ஊடகத்தின் மீது காட்ட முனையலாம்.

தமது அன்றாட செயல்வட்டத்திற்கு வெளியே பல நிகழ்வுகளை பல்வேறு சூழ்நிலைகளில் செய்தித் திரட்ட வேண்டிய ஊடகவியலாளர்கள் அச்சூழ்நிலைகளில் எற்படும் எதிர்ப்புக்கள் மன அழுத்தம் என்பவற்றிற்குத் தம்மை ஏற்கனவே தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

**உங்களால் அறிக்கையிடப்படும் மக்கள் உங்களை எவ்வாறு காண்கிறார்கள்?**

பிரதான தரப்பினர் உங்களை எவ்வாறு பார்க்கின்றனர்? ஊடகவியலாளர் மீதான அவர்களின் கண்ணோட்டம் உங்கள் ஊடக நிறுவனத்தின் மீது விரோதமுள்ளதா? நீங்கள் மோதலொன்றின் ஏதோவொரு தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்துபவராக காண்பதற்கு இடமுண்டா?

**வரைபடங்களை உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்**

பிரதேசம் பற்றி உங்களுக்கு நன்றாக தெரியாவிடின் சிறந்த தரத்திலான மற்றும் காலத்திற்கு பொருந்தக் கூடிய வரைபடமொன்றினை உங்களிடம் வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்துங்கள்.

**சந்தேகமா? ஊடகவியலாளர் ஒருவரிடம் கேளுங்கள்**

பரிச்சயமற்ற பிரதேசமொன்றிற்குச் செல்கையில் பிரதேசத்தின் ஊடகவியலாளரொருவரிடம் விசாரியுங்கள். பிரதேசத்தில் ஆபத்துக்கள் இடம் பெறக்கூடிய இடங்கள் தொடர்பாக அவர்கள் தெரிவிக்கும் தகவல்களைக் கேளுங்கள்.

மனதாலும், உடலாலும் தம்மை அவர்கள் முழுமையாக தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும். வரக்கூடிய ஆபத்துக்கள் பற்றிய முன்னறிவு, அதற்கான தற்பாதுகாப்பு நடவடிக்கை என்பவற்றை அவர்கள் தமதாக்கிக் கொண்டு எந்தச் சூழ்நிலையையும் தாம் கையாளக்கூடிய சக்தி பெற்றிருக்க வேண்டும். அவர்கள் அனைத்தையும் விதியிடம் விட்டுவிட முடியாது. ஒரு ஊடகவியலாளர் முற்றாக எந்தவொரு ஆபத்தும் வராமல் சூழ்நிலைகளை கையாள முடியும் என்பது இயலாத காரியம். ஆனால் வரும் ஆபத்துக்களைப் பற்றிய அறிவை பெருக்கிக் கொண்டு தாம் எடுக்க வேண்டிய துணிகர முடிவுகளை கணிப்பீடு செய்யக் கூடிய நிலையில் அவர்கள் செயற்பட முடியும்.

தயார் நிலையில் இல்லாத செய்தியாளருக்கோ, படப்பிடிப்புக் குழுவினருக்கோ அதிக ஆபத்தில்லாத சூழ்நிலைகள் கூட மிக ஆபத்தானதாக அமைந்து விடலாம். மாறாக மிக ஆபத்தான சூழ்நிலைகள் நல்ல கணிப்பு, நல்ல தயார் நிலை, நல்ல அறிவுப் பிரயோகம் என்பவற்றால் ஆபத்தற்ற சூழ்நிலையாக மாற்றப்படலாம்.. நல்ல திட்டமிடல் உங்களை ஓர் சூழ்நிலைக்குள் ஆபத்தில்லாமல் போய்வர உதவுவது மட்டுமல்லாமல் உங்கள் செய்திச் சூழ்நிலையில் உள்ள முக்கிய கூறுகள், பின்னணித் தகவல் என்பவற்றை உங்களுக்குத் தெளிவுபடுத்தி உங்களை ஓர் சிறந்த அறிவு படைத்த திறமையான செய்தித் திரட்டுனராகவோ படப்பிடிப்பாளராகவோ உருவாக்க முடியும்.

## நீங்கள் செல்வதற்கு முன்பு

### *(அ) உங்கள் தேகநிலை பணிக்கு முகம் கொடுக்கக் கூடிய தயார் நிலையில் உள்ளது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.*

அனேகமான ஊடகவியலாளர்கள் தமது நிலையை உயர்த்தக் கூடிய மிக ஆபத்தான சந்தர்ப்பங்கள் வரும்போது அதைத் தட்டிக்கழிக்க விரும்புவதில்லை. ஆனால் ஊடகவியலாளர் மன சுத்தியோடு தாம் உடல் ரீதியாக அப்பணிக்கு முகம்கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கின்றோமா? என்று தம்மைக் கேட்டுக் கொள்ள வேண்டும். அவசியம் ஏற்படின் ஓர் இரவு பூராவும் நடையாகப் பயணிக்க முடியுமா? அல்லது பாதுகாப்புத் தேடி ஓட முடியுமா? வசதியான ஓட்டல்கள் இல்லாதபோது உங்களால் ஈடுகொடுக்க முடியுமா? உடல் உறுதி என்பது முக்கியமானது. தேவைப்படும் போது நீங்கள் உடலை வருத்தி உழைக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

### *(ஆ) நீங்கள் உட்புகும் சூழ்நிலைப்பற்றி உங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ளுங்கள்*

நீங்கள் உட்புகும் இடத்தின் அரசியல், சமூக சூழ்நிலை பற்றி உங்களுக்கு எவ்வளவு தெரியும்? சூழ் நிலையை நிர்ணயிக்கும் முக்கிய நடிகர்கள் யார்?



*ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு மத்தியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஊடகவியலாளர்கள்.*

***படம் : ஜனப்பிரிய சமரதிவாகர***

அண்மைக்கால முன்னேற்றங்கள் குறித்து உங்களுக்குப் போதிய தகவல் கிடைத்துள்ளதா? அவர்கள் பிரயோகிக்கும் மொழி யாது? ஊடகம் பற்றி அவர்களுக்கு இருக்கும் பொதுவான மனப்பாங்கு யாது? குறிப்பாக உங்கள் பதவி, உங்கள் ஊடக நிறுவனம் என்பன பற்றி அவர்களின் மனோநிலை யாது? உங்கள் இனத்துவம் உங்களுக்கு அதிக ஆபத்தைக் கொண்டு வருமா? ஊடகவியலாளர் மீது அல்லது குடிமக்கள் மீது வன்முறையை உபயோகிக்கும் வரலாறு கண்ட குழுக்கள் ஏதும் இருக்கின்றனவா? நீங்கள் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய முக்கிய எல்லைகள் எவை? நீங்கள் உட்புக முடியாத 'தடைப்பிரதேசங்கள்" ஏதும் உண்டா? நீங்கள் யாரிடம் எத்தகைய அனுமதி பெற வேண்டும்? நீங்கள் வீதியில் இறங்கும் போது அது உங்களுக்குக் கைகொடுக்குமா?

நீங்கள் செய்தி திரட்டப் போகும் சூழ்நிலை, மக்கள், சமூகங்கள் என்பன பற்றிய தெளிந்த அறிவு மிக முக்கியமானது. கலாசாரத்தையோ மொழியையோ புரிந்து கொள்ளாமல் ஊடகவியலாளர் தம்மையறியாமலே மக்கள் மனதைப் புண்படுத்தி தம்மை அவர்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினை தேசிய ஊடகவியலாளர்களுக்குக் கூட ஏற்படலாம். தமக்குப் பரிச்சயமில்லாத இடத்திற்கோ பிரதேசமொழி பாவிக்கப்படும் இடத்திற்கோ செல்லும் போது இப்பிரச்சினை ஏற்படலாம். சில ஊடகவியலாளர் தமக்கு வேண்டிய கதையைப் பெற்றுக் கொள்ள பொறுமையிழந்தோ அல்லது தமது பாதுகாப்பின்மை உணர்வுகளை மறைப்பதற்கோ ஓர் ஆணவப் போக்கான தொனியைக் கடைப்பிடிக்க முடியும். ஆனால் மக்களை மதிக்கப் பழகும் ஊடகவியலாளரோ படப்பிடிப்பாளரோ தான் மக்கள் ஆதரவைப் பெற முடியும்.

**ஏதாவது ஒரு விடயத்தினை கூறமுடியாத நிலையில் இருக்காதீர்கள்**

உங்களுடைய நாட்டின் பிராந்திய பழக்க வழக்கங்கள், மொழி, சிந்திக்கும் விதம் பற்றி அறிந்து கொள்ளுங்கள். மக்களுக்கு அவர்களுடைய மொழியிலே அழைப்பதற்கு உங்களுக்கு இயலுமாயின் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு அது உதவி புரியும். உதவி கோரும் முறையை அறிந்து கொள்ளவும்.

**சகா ஒருவருடன் பயணம் செய்யவும்**

பல்வேறு தடைகள் உள்ள பிரதேசங்களில் பயணஞ் செய்யும் ஊடகவியலாளர்கள் தனிமையில் பயணஞ் செய்வதனை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். தனிமையில் பயணஞ் செய்து ஆபத்தொன்றினை ஏற்படுத்திக் கொள்வதனை விட போட்டியாளரொருவருடன் பயணஞ் செய்து ஒருவரையொருவர் கவனித்துக் கொள்ளல் சிறந்ததாகும்.

மொழியறிவு எப்போதும் கைகொடுக்கும். நீங்கள் தொடர்ந்து சிறிது காலம் ஓர் இடத்தில் பணியாற்றப்போவதாய் இருந்தால் அச் சூழமைவு மொழியின் அடிப்படைகளையாவது கற்றுக் கொள்ளுங்கள். ஊடகவியலாளர்கள் தமது மொழி அறியப்படாத அல்லது வரவேற்கப்படாத இடங்களில் செய்தி திரட்டும் குறுகிய கால அறிவிப்போடு திடீரென்று அனுப்பிவைக்கப்பட முடியும். ஓர் இரவில் நீங்கள் மொழியை கற்றுக் கொள்ள முடியாது. அப்பிரதேச மக்களின் மொழியைப் பேசும் போது அவர்கள் உங்களுடன் அண்மிக்கின்றார்கள். நான் ஓர் ஊடகவியலாளர் எனக்கு உங்களால் உதவ முடியுமா? அல்லது 'நான் ஒரு வைத்தியரைப் பார்க்க வேண்டும்' போன்ற முக்கிய வாக்கியங்களைப் பேசப் பழகிக் கொள்ளுங்கள்.

நீங்கள் முதன்முறையாக ஒரு நாட்டிற்கோ அல்லது பிரதேசத்திற்கோ சென்றால் உங்களுக்குத் தெரியாதது எவ்வளவோ இருக்கும். சிறந்த ஊடகவியலாளர்களுக்கு எல்லாம் தெரிந்திருக்க முடியாது. என்றாலும் அவர்கள் முக்கிய கேள்விகளைக் கேட்கக் கற்றுக் கொள்வதில் திறமை படைத்தவர்களாய் இருப்பார்கள். ஏற்கனவே தாம் வேலை பார்க்கும் மக்களை மதிக்கும் ஊடகவியலாளருடன் உங்கள் நட்பினைப் பலப்படுத்துங்கள். தாம் வேலை பார்க்கும் இடங்களையும் மக்களையும் பற்றி குறைகூறும் அவதூறு பேசும் நபர்கள் அச்சூழ்நிலைகள் பற்றி நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள உதவியாய் இருக்க மாட்டார்கள்.

### *(இ) உங்கள் உரிமைகளைத் தெரிந்து கொள்ளுங்கள்*

தீயணைப்பு வீரர்கள் தாங்கள் எதிர்நோக்கும் சூழ்நிலை எப்படிப்பட்டது, அதனை எப்படிக் கையாள வேண்டும் என்று தெரிந்து கொள்ளாமல் பற்றி எரியும் கட்டிடத்திற்குள் நுழைய மாட்டார்கள். ஆனால் ஊடகவியலாளர்கள் தாம் செய்தித்திரட்ட வேண்டிய சூழ்நிலையில் உள்ள முரண்நிலை பற்றிய உண்மைநிலை புரியாமலே அங்கு செல்கின்றனர். (அனுப்பப்படுகின்றார்கள்) சில ஊடகவியலாளர்கள் தாம் செல்லும் இடங்கள் பற்றிய போதிய அறிவின்றி, சர்வதேச சட்டங்கள் பற்றியோ, நடுநிலை கண்காணிப்பாளர்கள் என்ற முறையில் தங்கள் உரிமைகள் பற்றியோ முறையாகத் தெரிந்து கொள்ளாமல் பயணம் செய்கின்றார்கள். அனேகர் ஜெனிவா ஒப்பந்த விதிகளையோ போரில் ஈடுபடாதோரின் மனித உரிமைச் சட்டம் கூறும் உரிமைகளையோ சொல்ல முடியாதவர்களாய் இருக்கின்றார்கள். தாம் ஓரிடத்திற்குச் செல்வதற்கு முன்பு அவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் சபைக் கிளை நிறுவனங்கள், பிராந்திய அரசியல் அமைப்புகள் என்பன பற்றி தெரிந்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

**ஜெனீவா உடன்பாட்டின் சாரம்சமொன்று**

ஊடகவியலாளர்களுக்கான ஜெனீவா உடன்பாட்டின் சாராம்சத்தை அறிவதற்கு 8ஆம், 9ஆம் பக்கங்களைப் பார்க்கவும்.

### ஜெனிவா உடன்பாடு

யுத்த காலத்தின் போதோ அல்லது உள்நாட்டு கலவரம் ஒன்றின் போதோ ஓர் ஊடகவியலாளரைக் கொலை செய்யவது அல்லது துன்புறுத்தப்படுவது

ஒா் யுத்தக் குற்றச் செயல் என ஜெனிவா உடன்பாடு வரைவிலக்கணம் செய்கிறது. நாடுகளுக்கிடையேயோ அல்லது உள்நாட்டு ஆயுத மோதல்களின் போதோ பொது மக்களின் உரிமை எதுவோ அதே உரிமையை ஜெனிவா உடன்பாடு ஊடகவியலாளருக்கு அளிக்கின்றது. கடதாசியில் எழுதப்பட்டுள்ள இந்தச் சட்டம் கொலை வெறி கொண்ட கொலையாளியை தடுத்து நிறுத்தப் போவதில்லை. ஆனால் யுத்தக் குற்றவாளிகள் நீதிச் சட்டத்தின் முன்பு நிறுத்தப்படுவது உலகில் அதிகரித்துக்கொண்டு வருவது மட்டுமல்ல இராணுவங்களும் துணைப் படைகளும் யுத்தக் குற்றம் என்பது பற்றிய அறிவை உடையவா்களாகவே காணப்படுகின்றாா்கள். ஊடகவியலாளா்கள் இந்த அறிவை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் ஓா் யுத்த சூழ்நிலைக்குச் செல்லுகின்றீா்கள் என்றால் ஜெனிவா உடன்பாட்டின் ஓா் பிரதியை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். குறிப்பாக யுத்தத்தில் சம்பந்தப்படாத பொது மக்கள் போலவே ஊடகவியலாளா் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியை எடுத்துச் செல்லுங்கள். அப்பகுதியை தேவையான எல்லா மொழிகளிலும் மொழி பெயா்த்துக் கொள்ளுங்கள். ஆனால் ஊடகவியலாளா் யுத்தத்தில் ஈடுபட்டாலோ, ஆயுதம் ஏந்தினாலோ அல்லது உளவு பாா்த்தாலோ இத் தகைமையை இழப்பா் என்பதை மறவாதீா்கள். இச் செயல்களை அவா்கள் புரிந்தால் அவா்கள் ஊடகவியலாளராய் இருக்கத் தவறிவிடுகிறாா்கள்.

### *(ஈ) சமூகக் காப்பு*

உங்களுக்கு ஏதும் தவறு நடந்துவிட்டால் நிலைமை என்ன? எத்தகைய காப்புறுதி உங்களிடம் உள்ளது? உங்கள் குடும்பத்திற்கு என்னவாகும்? உடனடியாகத் தேவைப்படுவது மருத்துவ சிகிச்சை அல்லது புனா்வாழ்வு என்பதாய் இருக்கலாம். ஏற்பட்ட உடற் காயம் அல்லது மனவடு என்பவற்றில் இருந்து விடுபட நீண்டகால கவனிப்பு உங்களுக்குத் தேவைப்படலாம். தங்களால் பணிபுரிய முடியாமற் போனால் தங்கள் ஊதியம் குறையாமல் தொடா்ந்து கிடைக்கும் என்பதையும் தாங்கள் இறக்கும் பட்சத்தில் தங்கள் குடும்பத்தினா் தொடா்ந்து பராமரிக்கப்படுவா் என்பதனையும் ஊடகவியலாளா் தெரிந்து வைத்திருக்க வேண்டும். ஊடகங்கள் இத்தகைய காப்புறுதி வழங்க தங்களுக்கு நிதிபலம் போதாது என்று கூறலாம். ஆனால் எவராயினும் நட்டஈடு செலுத்தியே ஆக வேண்டும். ஆனால் அவா் பாதிக்கப்பட்ட தனிநபராக இருக்கக் கூடாது. பத்திரிகை நிறுவனங்கள் இந்தத் தேவை பூா்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். காப்புறுதி, மருத்துவ நிதியம் என்பன தன்னிச்சையான பத்திரிகையாளருக்கும்அனைத்து அங்கத்தினருக்கும் வழங்கப்பட வேண்டும்.

பல ஊடக நிறுவனங்கள் காப்புறுதி மருத்துவ நலம் என்பன வழங்காமலே செய்திகளைத் திரட்டிக்கொள்ள தமது ஊழியா்களையோ தன்னிச்சையான பத்திரிகையாளா்களையோ பாவித்துக் கொள்கின்றாா்கள். ஆனால் ஊடகவியலாளா்கள், ஊடகத் தொழிற் சங்கங்கள் என்பன அணிதிரண்டு இத்

**மருத்துவ நடவடிக்கைகளை தயாா்படுத்தல்**

மருத்துவ விடயங்களின் வழிமுறைகள் தொடா்பான தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடிய இடங்கள் 1வது பந்தியில் காட்டப்பட்டுள்ளது.

**வெடி குண்டுகள் அல்ல அறிக்கைப் பத்திரங்கள்**

எந்தவொரு சந்தா்ப்பத்திலும் ஆயுதமொன்றினை எடுத்துச் செல்லாதீா்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் ஜெனீவா உடன்பாட்டுப் பாதுகாப்பிலிருந்து தவிா்க்கப்படுவதுடன் உங்களுயை பாதுகாப்பும் உங்களுடைய சகாவின் பாதுகாப்பும் ஆபத்திற்குள்ளாக்கப்படும்.

தவறான நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

### *(உ) நோய் ஆபத்து குறித்து அறிந்து கொள்ளுங்கள்*

நீங்கள் போகும் இடத்தில் பெரும்பாலும் காணப்படும் நோய்கள் யாவை? நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய தடுப்பு ஊசிகள் எவை? நீங்கள் கொண்டு செல்ல வேண்டிய மருந்துகள் எவை? உலக சுகாதார நிறுவன சர்வதேச பயணக் கையேடு, http://www.who.int/ith/countrylistol.html இணையத்தளம் ஆகியவையுடன் ஆரம்பியுங்கள்.

### *(ஊ) உங்கள் செய்தி நிறுவனத்துடனான தொடர்பை உறுதி செய்து கொள்ளுங்கள்*

நீங்கள் தொலைவிடத்தில் பணியாற்றும் போது உங்கள் செய்தி நிறுவனத்துடன் அல்லது தயாரிப்பாளருடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படலாம். இரவோ பகலோ தமதுசெய்தி திரட்டுனர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமல் போகும் போது நிறுவனத்தினர் கவலை கொள்கின்றார்கள். நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள்? என்ன செய்கின்றீர்கள்? என்பது மற்றவர்களுக்குத் தெரியாமல் போனால் அது உங்களுக்கு ஆபத்து என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஆபத்து மிகுந்த எல்லா சூழ்நிலைகளிலும் ஊகடவியலாளர்கள் பொறுப்பு மிகுந்த ஒருவருக்குத் தங்கள் போக்குவரத்து குறித்த விபரங்களை அறியத்தருவது அத்தியாவசியமானது.

எழக்கூடிய பிரச்சினைகள் குறித்து உங்கள் செய்தி நிறுவனத்துடன் ஆலோசித்து ஒரு நேரத்தை ஒதுக்குங்கள். உங்கள் செய்தியோ படமோ வந்து சேருவதற்கு முன்பு உங்கள் நிறுவனத்தினர் பொறுமையிழக்கலாம். உங்கள் களத்தில் சிறிய காரியங்களை முடிப்பதற்குக் கூட காலதாமதம் ஆகலாம் என்பதை அவர்கள் உணராமல் இருக்கலாம். இதன் காரணமாக தங்கள் எதிர் நிறுவனமோ அல்லது கிளைகளோ தரும் செய்திகளையோ படங்களையோ அவர்கள் ஏற்றுக் கொண்டு தங்கள் சொந்தத் தகவலாளர்களை கருத்திற் கொள்ளாமல் விடலாம். இதன் காரணமாகத்தான் செய்தி பல வேளைகளில் ஒரே மாதிரியாய் வெளிவருகிறது. செய்திகளில் பன்மைத்துவம் செய்திகளில் வித்தியாசம் என்பதை செய்தி நிறுவனங்கள் மறந்துவிடுகின்றன. எனவே செய்தி நிறுவனங்கள் தமது ஊடகவியலாளர்கள் களத்திலிருந்து தரும் செய்திகளிலும் படங்களிலும் நம்பிக்கை வைக்க முன்வர வேண்டும். ஏற்கனவே ஓர் நிறுவனம் தந்திருக்கும் செய்திகளையும் படங்களையும் தாமும் திரட்டுவதற்காக ஊடகவியலாளரும் படப்பிடிப்பாளர்களும் தம்மை ஆபத்து சூழ்நிலைகளில் உட்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது முட்டாள்த் தனமாகும்.

நாளுக்கு நாள் நடப்புகளின் போது நெருக்கடியான தீர்மானங்களை தடுக்கும் அதிகாரம் களத்திலிருப்பவர்களுக்கே உரியது. முட்டாள்த் தனமாக ஆபத்தான தீர்மானங்களை எடுக்கும்படி உங்களை ஊக்குவிக்கும் உங்கள்

நிறுவன அதிகவேகப் போக்கு குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். அதேபோன்று எல்லைகளைக் கடத்தல், ஓர் நேர்காணலுக்காக ஆயுதப் போராளிகளுடன் செல்லுதல் போன்ற நேரங்களில் உங்கள் நிறுவனம் தங்களிடம் முன் அனுமதியைப் பெறவேண்டும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் நீங்களும் உங்கள் குழுவினரும் தீர்மானத்தை எடுத்து அதன்படி ஒழுக வேண்டும். ஆபத்தான தீர்மானங்கள் எடுப்பது குறித்து குழுவினராக நீங்கள் கலந்தாலோசித்து இணக்கப்பாட்டிற்கு வரவேண்டும். இந்த முடிவுகளை நீங்கள் பதிவுசெய்து கொள்ள வேண்டும். ஆபத்து சூழ்நிலை தொடர்ந்து இருந்தால் அனுபவ அடிப்படையில் தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். இந்த அனுபவக் குறிப்புகள் மிகவும் பிரயோசனமாகலாம். தொடர்புகள், ஆபத்துப் பகுதிகள், உதவி இடங்கள் என்பன பதிவு செய்யப்பட்டு பகிரப்படலாம். உயிர்களைக் காப்பாற்றக் கூடிய தகவல்களைப் பகிர்ந்து கொள்ள ஊடகவியலாளர் முன்வர வேண்டும். களத்திலிருந்து திரும்பும் ஊடகவியலாளர் மீளறிவிப்பு செய்வதால் அலுவலகத் தகவலை புதுப்பித்தல் செய்யலாம். தினம் இவ்வாறு செய்யும் போது ஊடகவியலாளரோ அல்லது குழுவில் ஒரு நபரோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமேல் தொடர்பு கொள்ளாவிட்டால் ஆவணந் தேடும் நடவடிக்கைக்கு இது உதவும். ஊடகவியலாளர் ஆபத்தில் இருந்தாலோ அல்லது தடுத்து வைக்கப்பட்டிருந்தாலோ தனது நிறுவனம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பது இதனால் தெரிந்திருப்பதால் அவர் தீர்மானம் எடுக்க இது உதவும். இப்படிப்பட்ட நாளாந்த பதிவு ஒருவர் காயப்பட்டிருந்தாலோ, நோய்வாய்ப்பட்டாலோ, பலவீனமாயிருந்தாலோ அவரை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு உரிய திட்டங்களை உறுதி செய்வதாய் அமைய வேண்டும்.

### *(எ) சரியான உபகரணங்களைக் கொண்டு செல்லவும்*

உதவும் உபகரணம் பலவகைப்படலாம். கவசவாகனம் முதல் மின் அலை தொலைபேசி, நனைந்தாலும் பற்றக் கூடிய தீக்குச்சி, விற்பனைக்கான சாக்லேட்டுகள் வரை இதில் அடங்கும். ஊடகவியலாளர், படப்பிடிப்பாளர், படப்பிடிப்புக் குழுவினர் ஏற்கனவே தம்முடன் கொண்டு செல்லவேண்டிய உபகரணங்கள் அனேகம் உண்டு. நீங்கள் எவ்வளவு கொண்டு போகலாம் என்பது நீங்கள் எங்கிருக்கின்றீர்கள் உங்கள் வசதி என்ன என்பதைப் பொறுத்தது. நீங்கள் கொண்டு போக வேண்டிய முக்கிய உபகரணங்களில் சில பின்வருமாறு :

### பத்திரிகை அடையாள அட்டை

இது உங்களை அடையாளம் காட்டும். உங்கள் படத்தைத் தாங்கி வரும். இது உங்கள் நிறுவனத்தாலோ, தொழிற் சங்கத்தினாலோ, உங்கள் தொழில் வழங்குனராலோ உங்களுக்குத் தரப்படலாம். ஓர் அங்கீகாரம் பெற்ற முன்னணி நிறுவனத்தினால் தரப்படும் அடையாள அட்டை ஊடகவியலாளர் உலகரீதியில் அங்கீகாரம் பெற்று தொழில் புரிபவர் என்ற கருத்தை உறுதி செய்கின்றது.

## ஜெனிவா உடன்பாடு

ஆயுத மோதலொன்றின் போது சகல மனித உயிர்களும் மதிக்கப்பட வேண்டுமென ஜெனிவா உடன்பாடு கோருகிறது. இதிலே ஊடகவியலாளர்களுடைய மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமெனக் கூறப்படுவதுடன், அவர்கள் ஏனைய பொதுமக்களைப் போன்று வன்முறை, மிரட்டல், கொலை, சிறைவைப்பு, சித்திரவதை போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்படுகிறது. சட்டபூர்வமான அறிக்கை 1949ம் ஆண்டு தொடக்கம் காணப்படுவதோடு பல நாடுகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இச் சட்டங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டங்களிலும் பங்காக உள்ளன. ஓர் இராணுவ வீரன் அல்லது ஆயுததாரி இவற்றை மீறினால் அது யுத்த குற்றச் செயலாகின்றது. ஊடகவியலாளர்கள் இந்த உரிமைகளை அறிந்து வைத்து அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும்.

### சாராம்சம்

அரசாங்கங்கள் பின்வருமாறு செயற்பட வேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கூறுகின்றது :

- சகல நாடுகளும்... நண்பர்களையும், எதிரிகளையும் சமனாகப் பராமரிக்க வேண்டும்.
- எல்லா மனிதர்களையும் மதித்து, அவனையோ அல்லது அவளையோ கௌரவித்து, குடும்ப உரிமைகளைப் பாதுகாத்து, சமய உரிமைகளைப் பாதுகாத்து, சிறு பிள்ளைகளுடைய உரிமைகளுக்கு விசேட கவனம் அளிக்க வேண்டும்.
- பின்வருவனவற்றை தவிர்த்தல் வேண்டும். மனிதாபிமானமற்ற, கீழ்த்தரமான நடத்தை, பணயக் கைதிகள், பாரிய படுகொலைகள், சித்திரவதை, விசாரணையற்ற கொலைத் தீர்ப்புகள், நாடுகடத்தல், உடமைகளை கொள்ளையடித்தல் மற்றும் தன்னிச்சையாக சேதம் ஏற்படுத்தல்.

### காயப்பட்ட ஆயுததாரிகள், யுத்த சிறைக்கைதிகள், பொதுமக்கள் யாவருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

முதலிரண்டு ஒப்பந்தங்களும் காயப்பட்ட, சுகயீனமான ஆயுததாரிகளினதும், வைத்திய வேலைகளில் ஈடுபடுபவர்களினதும் பாதுகாப்பை, யுத்தக் களத்திலும், கடலிலும் உறுதி செய்கின்றது. **மூன்றாவது ஒப்பந்தம்** யுத்தக் கைதிகளை பாதுகாக்கின்றது. பிரத்தியேகமாக யுத்த சூழ்நிலையில் வேலை செய்ய நியமிக்கப்பட்ட ஊடகவியலாளர்களைக் குறித்து மூன்று உடன்பாடுகளும் குறிப்பிடுகின்றன. நான்காவது ஜெனிவா உடன்பாடு கைப்பற்றப்பட்ட அல்லது எதிரியின் எல்லையில் உள்ள பொது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றது.

இதில் உறுப்புரை 3, எல்லா உடன்பாடுகள் குறித்து முக்கியமான விடயங்களைக் கூறுகின்றது.

1. ஆயுத மோதலில் எந்த விதப் பங்கும் வகிக்காத யுத்தங்களை புறக்கணித்த இராணுவத்தினர், போர் செய்ய முடியாமல் சுகயீனமடைந்தோர், காயமடைந்தோர், சிறை வைக்கப்பட்டவர்கள், எல்லா சந்தர்ப்பங்களிலும் மனிதாபிமானத்தோடு நடாத்தப்பட வேண்டும் எனவும் இன, மத, நிற, பால், பிறப்பு, செல்வாக்கு என்கின்ற அடிப்படையில் இவர்கள் ஒதுக்கப்படுதல் கூடாது எனவும் கூறுகிறது. பின்வரும் செயல்கள் மேல் குறிப்பிடப்பட்ட சாராருக்கு செய்யப்படக் கூடாதவை.
   (அ) வாழ்க்கைக்கு அச்சுறுத்தலான, நபருக்கு அச்சுறுத்தலான வன்முறை, சகலவிதமான கொலைகள், கொடுமைப் படுத்தல், மற்றும் சித்திரவதை.
   (ஆ) பணயக் கைதிகளாக எடுத்தல்
   (இ) சுய கௌரவத்துக்கு எதிரான நடத்தைகள், குறிப்பாக இழிவான, கீழ்த்தரமாக நடத்துதல்.
   (ஈ) யாப்பு வழி இல்லாத நீதி மன்றத்தினால் விசாரணையில்லாத மரண தண்டனைகள் வழங்கப்படக் கூடாது. பொது மக்களினால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட, நீதியை உறுதி செய்கின்ற ஓர் அமைப்பினால் நியாயம் தீர்க்கப்பட வேண்டும்.
2. காயமடைந்தவர்களையும், நோயாளர்களையும் ஒன்றிணைத்து அவர்களை பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

### உடகவியலாளர்கள் பொது மக்களைப் போன்று பாதுகாக்கப்பட வேண்டும் உறுப்புரை 79 முக்கியமானது

ஆணை 1 ஜெனிவா உடன்பாடு (இது 1978ம் ஆண்டு அமுலுக்கு வந்தது) உறுப்புரை 79இன் படி :

1. உறுப்புரை 50 முதலாம் பந்தியில் உள்ளவாறு ஒரு ஊடகவியலாளர் யுத்த சூழ்நிலை ஒன்றில் ஆபத்தான வேலையில் ஈடுபட்டிருக்கும் போது அவர் பொதுமகனாகவே கருதப்படுவார்.
2. இந்த ஆணையின் படி ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமானால், அவர்கள் பொதுமகனாக, அல்லது பொது மகளாக கருதப்படுவதற்கு முரணான செயற்பாட்டில் ஈடுபடக் கூடாது. அத்தோடு உறுப்புரை 4 A யின் (நான்காம் உடன்பாட்டின் படி) இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள யுத்த அறிக்கையாளரின் உரிமைகளுக்கு ஊறு விளைவிக்காதவகையில் நடந்து கொள்ள வேண்டும்.
3. இந்த ஆணையில் இணைப்பு 11இல் உள்ளவாறு ஓர் அடையாள அட்டையை அவர்கள் பெற்றுக் கொள்ளுதல் அவசியம். இந்த அட்டை ஊடகவியலாளரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசாங்கத்தினால், அல்லது பிரதேசத்தினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு அதிலே ஊடகவியலாளர் பிரதிநிதித்துவப்படுத்துகிற நிறுவனம், அதனுடைய முகவரி, மற்றும் ஊடகவியலாளரின் தொழில் நிலை என்பன குறிப்பிடப்பட வேண்டும்.

### உடன்பாடு சிவில் யுத்தங்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. கலவரங்களை அல்ல.

**ஆணை 2** ஜெனிவா உடன்பாட்டை உள்நாட்டு ஆயுத முரண்பாடுகள் குறித்தும் சில விடயங்களை கூறி வைக்கின்றது. அதாவது ஒரு நாட்டின் எல்லைக்குள் அரச இராணுவத்தினருக்கும், ஏனைய எந்தவொரு ஆயுத குழுவிற்கும் இடையிலான ஆயுத மோதலை இது குறிப்பிடுகின்றது.

இந்த ஆணையின் படி பாரிய சிவில் முரண்பாடுகள் குறிப்பிடப்படுகின்றதே தவிர, "உள்ளூர் கலவரங்கள், கைகலப்புகள், ஆங்காங்கே ஏற்படும் வன்முறை சம்பவங்கள் போன்றவற்றை உடன்பாடு உள்ளடக்கவில்லை.

### பொது மக்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும், எவ்வாறு நடத்தப்படக் கூடாது.

ஆணை 2 உறுப்புரை 4 எவ்வாறு யுத்தத்தில் ஈடுபடுகிறார்கள். பொதுமக்களை எவ்வாறு நடத்த வேண்டுமென்று கூறுகின்றது.

1. அவர்களுடைய சுதந்திரம் வரையறுக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிடினும், நபருக்கும், அவருடைய கௌரவமும், நம்பிக்கைகளும், மதப் பாரம்பரியங்களும் மதிக்கப்பட வேண்டும். எந்தவித பாகுபாடும் இன்றி அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் மனிதாபிமானத்தோடு நடாத்தப்பட வேண்டும். யாரும் தப்பியிருக்கக் கூடாது என உத்தரவிடுவது தடை செய்யப்பட்டுள்ளது.
2. பின்வரும் நடத்தைகள் இங்கு குறிப்பிடப்படும் நபர்களுக்கெதிராக எந்தவொரு நேரத்திலும், இடத்திலும் தடை செய்யப்பட்டுள்ளது.

   (அ) உயிருக்கெதிரான வன்முறை, சுகாதாரத்துக்கு எதிரான, மற்றும் உடல், உள நலனுக்கு எதிரான வன்முறைகள். குறிப்பாக கொலை மற்றும் சித்திரவதைகள். அங்கவீனப்படுத்தல் அல்லது உடல் ரீதியான தண்டனை.

   (ஆ) கூட்டுத் தண்டனைகள்

   (இ) பணயக் கைதிகளாக எடுத்தல்

   (ஈ) பயங்கரவாத நடத்தைகள்

   (உ) சுய கௌரவத்துக்கு எதிரான செயற்பாடுகள். குறிப்பாக கீழ்த்தரமான, அகௌரவமான செயல்கள். பாலியல் வல்லுறவு பலவந்தப்படுத்தப்பட்ட விபச்சாரம் போன்ற அவமரியாதையான செயல்கள்.

   (ஊ) அடிமைத்துவம் மற்றும் அடிமை வியாபாரம்

   (எ) கொள்ளை

   (ஏ) மேற்குறிப்பிட்ட எந்தவொரு செயலையும் செய்வதாக அச்சுறுத்தல்

மோதல் சூழ்நிலைகளில் அதில் பங்கேற்பவர்களால் உங்கள் அடையாள அட்டை வரவேற்கப் படலாம். வரவேற்பைத் தராமலும் விடலாம். இராணுவத்தினர் அல்லது பொலிசாரால் கையொப்பமிடப்பட்ட கடிதங்களையும் நீங்கள் சுமந்து செல்லலாம். நீங்கள் ஊடகவியலாளரென்றும் உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் அவர்கள் தங்கள் படையினரிடம் கோரி உங்களுக்குக் கடிதம் தரலாம். வரக்கூடிய ஆபத்துக்களின் அடிப்படையில் இத்தகைய கடிதங்களின் உபயோகத்தை நீங்கள் எடைபோட வேண்டும். ஓர் போராட்டக் குழுத் தலைவரால் உங்களுக்குத் தரப்படும் அனுமதிச் சீட்டு காரணமாக நீங்கள் அரச படையினரால் கைதாகக் கூடிய ஆபத்து நேரலாம். அது உங்களுக்கோ மற்றவருக்கோ பாதகமாக அமையும் என்பது குறித்து சிந்தித்து நீங்கள் செயற்பட வேண்டும். போராட்டச் சூழலில் சோதனைச் சாவடிகளில் சோதனையிடும் போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஏதோ குழுவினருக்குப் பாதகமான அறிக்கை எதுவும் உங்கள் கைவசம் இருப்பது உங்களுக்கு ஆபத்தாக அமைந்து விடலாம்.

### அவசரத் தொலைபேசி எண்கள்

காயமேதும் ஏற்பட்டால் உடனடியாக அழைக்க வேண்டிய அவசர தொலைபேசி எண் பட்டியலொன்று உங்கள் கைவசம் இருக்க வேண்டும். நீங்கள் நேர்காணல் செய்யும் நபர்களுக்கு அதனால் ஆபத்து உருவாகும் என்று தெரிந்தால் அவர்கள் பற்றிய தகவல்களை நீங்கள் இரகசியமாய் வைத்திருக்க வேண்டும். பெயர்களையும் குறிப்புகளையும் வேறுபடுத்துங்கள். அல்லது புனை பெயர்களைக் குறிப்பிடுங்கள். புனை பெயர்கள் ஓர் இரகசியக் குறியீட்டு மொழியாகக் காணப்படக் கூடாது.

### போலி பணப்பையொன்று

உங்களுடைய பணம் மற்றும் தேவையான எழுத்தாவணங்கள் தெரியாத இடத்தில் பாதுகாப்பாக வைக்கவும். எவ்வாறாயினும் இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடிய சிறு தொகைப் பணத்தினை மற்றும் கொள்ளையடிக்கப்பட்டால் கொடுப்பதற்கு ஏதாவது இருத்தல் வேண்டும். சிறு தொகை பணம் மற்றும் பழைய க்ரடிட் காட் அட்டைகளைக் கொண்ட மேலதிகமான பணப்பையொன்றினை எடுத்துச் செல்லவும். உங்களிடம் கொள்ளையடிக்கப்பட்டால் அதனைக் கொடுக்கவும்.

### நீர்

போர்ச் சூழ்நிலைகளில் சுத்தமான நீர் கிடைப்பது கடினமாகலாம். உணவில்லாமல் நீங்கள் பல நாட்கள் உயிர் வாழலாம். ஆனால் சுத்தமான நீரைப் பருகுவதற்கு ஒவ்வொரு நாளும் உங்களுக்குத் தேவைப்படும் குடிநீர் போத்தல்களைக் கொண்டு செல்லுங்கள். அல்லது வடிகள், குடிநீர் தூய்மை செய்யும் மருந்து என்பவற்றைக் கொண்டு செல்லுங்கள்.

## பொல்லுகள் தடிகளை ஏந்தியவர்கள் பொலிசார் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே தாக்கினர்

**குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்கான ராவய பத்திரிகையின் புகைப்படப்பிடிப்பாளர் அஜித் செனவிரத்ன**



*டவுன் ஹோலில் இருந்து நானும் ஊர்வலத்துடன் வந்தேன். ஊர்வலம் செஞ்சிலுவைச் சங்க சுற்று வட்டத்தில் நின்றது. அவ்விடத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ஹ வருகை தந்தார். இந்த நேரத்தில் செஞ்சிலுவைச் சங்க கட்டிடமருகே பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதிகளவு பொலிசார் இருந்தனர். சிறிது நேரத்தில் அப் பொலிஸ் ஜீப் வண்டி கொள்ளுப்பிட்டி பக்கம் சென்றது. ஊர்வலத்தில் இருந்தவர்கள் கத்திக் கொண்டு முன்னோக்கி வந்தனர். வீதியின் வலது பக்கத்தில் சிலர் இருந்தனர். அவர்கள் கையில் இரும்புகளுடனும், பொல்லுகளுடனும், கற்களுடனும் காணப்பட்டனர். முதலில் ஒருவர் வந்து "யுக்திய" பத்திரிகையின் ஜனப்ரிய சமரதிவாகரவின் புகைப்படக் கருவியை பறிப்பதற்கு முயன்றார். ஜனப்பிரிய மீண்டும் அதனை இழுத்து எடுத்துக் கொண்டார். அதன் பின்னர் அவ்விடத்திலிருந்து முன்னோக்கிச் செல்வதற்கு எம்மால் முடிந்தது. நாம் முன்னோக்கிச் சென்றோம். இவர்கள் வீதியின் மறு பக்கத்திலேயே இருந்தனர். அவர்கள் எமக்குப் பின்னால் ஓடி வந்து எம்மைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். அப்பொழுது ஊர்வலம் அவ்விடத்தினை நெருங்கவில்லை. அவ்விடத்திலிருந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் அவர்கள் பொல்லுகளாலும் தடிகளாலும் தாக்க ஆரம்பித்தனர். என் அருகிலேயே யுக்தியவின் ஜனப்பிரியவும், லக்பிமவின் புத்திகவும் இருந்தனர்.*

*என்னைத் தாக்கும் பொழுது நான் ஊர்வலம் வரும் பக்கத்திற்கு ஓடினேன். ஏனைய ஊடகவியலாளர்களும் அருகிலிருந்த தோட்டங்களுக்கு ஓடினர். அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர். அவர்கள் அனைவரின் புகைப்படக்கருவிகளையும் அபகரித்துக் கொண்டனர். நான் ஓடும் போது எனக்கு முன் வீடியோ கமிராவை வைத்திருந்த ஒருவர் தாக்கப்படுவதனைக் கண்டேன். அதனை நான் புகைப்படம் எடுத்தேன். அதன் பின்னர் என்னை பின்னால் துரத்தி வந்தவர் என் முதுகில் பொல்லால் தாக்கினார். நான் தப்பி ஓடும் பொழுது என்னைப் பின்னால் துரத்தி வந்தனர். நான் வீதிக்கு வந்தேன். அவ்விடத்திலிருந்த தோட்டமொன்றின் மக்கள் என்னை அவர்களின் வீட்டுக்கு அழைத்துச் சென்று தண்ணீர் கொடுத்து உதவினர். அதன் பின்னர் நான் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன்.*

*தர்மபால மாவத்தையின் சமிக்ஞை விளக்கருகில் பொலிஸ் வீதித்தடையொன்று போடப்பட்டிருந்தது. அவ்விடத்தில் பொலிஸ் அதிகாரிகளும் இருந்தனர். எம்மைத் தாக்கியவர்கள் அந்தப் பக்கத்திற்கே சென்றனர். இவ் அனைத்து சம்பவங்களும் இடம் பெற்ற வேளையில் தர்மபால மாவத்தையின் இரு புறங்களிலும் பொலிஸ் அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் இவ்வனைத்துச் சம்பவங்களையும் பார்த்துக் கொண்டிருந்தனர். எனது பையையும் எடுப்பதற்கு இடமளிக்கவில்லை. இன்று அச்சம்பவத்தினை திரும்பிப் பார்க்கும் பொழுது ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக விளக்கமொன்று இருந்திருப்பின் நாம் பாதுகாப்பாக இருந்திருக்க முடியும் என நினைக்கின்றேன்.*

### முதலுதவிப் பொதி

மருத்துவ வசதி இல்லாத தூர இடங்களில் பணிபுரியப் போகும் ஊடகவியலாளர் முதலுதவிப் பொதியை தம்முடன் கொண்டு செல்வது அவசியம். முடிந்தால் இரண்டு பொதிகளை வைத்திருங்கள். ஒன்று உங்களுடன் இருக்கட்டும். இன்னொன்று வாகனத்தில் இருக்கட்டும். அத்தியாயம் 5 இதனை மேலும் விபரிக்கின்றது.

### தொலைநோக்குக் கண்ணாடி

படப்பிடிப்பாளர்கள் போர்ச்சூழலில் தங்களைப் பாதுகாக்க தொலைநோக்குக் கண்ணாடிகளைக் கொண்டு செல்வது அவசியம். தூர இருந்தே நிகழ்வுகளைப் பதிவு செய்ய இது உதவும். சக்திவாய்ந்த தொலைநோக்குக் கண்ணாடி இல்லாதபோது உயிரைப் பணயம் வைத்து மோதல் நிகழ்வுகளுக்கு அருகாமையில் படம் பிடிக்கச் செல்ல வேண்டி நேரிடும். உங்கள் நிறுவனத்தினர் சக்திவாய்ந்த தொலைநோக்கு கண்ணாடி, பாரமில்லாத படப்பிடிப்புக் கருவி என்பனவற்றை உங்களுக்குத் தரும்படி உறுதி செய்து கொள்ளுங்கள்.

### ஆபத்து சமிக்ஞை

ஓர் விசில் உங்கள் கைவசம் இருக்க வேண்டும். கவனத்தை உங்கள் வசம் ஈர்க்க அல்லது அபாய அறிவிப்புத் தர இது உதவும். உங்கள் குருதி வகை உடல் நல விபரங்கள், ஒத்துவராத மருந்துகள் என்பன பற்றிய விபரம் தரும் ஓர் மருத்துவ அடையாளக் காப்பினை கையில் அணிந்திருங்கள்.

### சுயதேவைப் பொருட்கள்

சவர்க்காரம், போர்வை, துவாய் போன்ற சுயதேவைப் பொருட்கள் தொலைவிடங்களுக்குச் செல்லும் போது கொண்டு செல்லுங்கள். கழிப்பகத்திற்குரிய உபகரணங்களை எடுத்துச் செல்லுங்கள். உங்கள் பற்கள், பாதங்கள், இரண்டையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

### (ஏ) வாகனத்தை தயார்ப்படுத்துங்கள்

தொலைவிடங்களில் பணியாற்றுவதானால் வாகனம் கைவசம் இருக்க வேண்டும். உங்கள் போக்குவரத்தை துரிதப்படுத்துவதற்காக மட்டுமல்ல சுமப்பதற்குக் கஷ்டமான பொருட்களை வைத்திருப்பதற்கு வாகனம் அவசியம். முடிந்தால் வாகனச் சாரதி உங்கள் குழுவைச் சேர்ந்த அர்ப்பணமுள்ள ஓர் நபராக இருப்பது நல்லது.

வாகனமும் சாரதியும் நல்ல நிலையில் இருப்பது அவசியம். சர்வதேச ஊடகவியலாளர் கவச வாகனத்தைப் பெறும் வாய்ப்புடையவர்களாய் இருக்கலாம். இத்தகைய வாகனம் ஆறுமாதம் தொடர்ந்து ஓர் சிறிய தொலைக்காட்சி நிறுவனத்தை நடத்துவதற்கு செலவாகும் பணத்தையும் விட விலை அதிகமானது. உங்கள் வாகனத்தின் இயந்திரம் நல்ல நிலையில் இயங்க வேண்டும். நல்ல மாற்று டயர்கள் கைவசம் இருக்க வேண்டும். மேலதிக எரிபொருள், தண்ணீர் என்பன இருக்க வேண்டும். உங்கள் வாகனத்தில் ஊடகம் அல்லது பத்திரிகையாளர் என்று எழுதி ஒட்டுவதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இது உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். சில சந்தர்ப்பங்களில் நீங்கள் தாக்குதலுக்கு இலக்காகலாம். இப்படிப்பட்ட பதாகைகளை நீங்கள் பாவிப்பதாய் இருந்தால் உங்கள் வாகனத்தின் மேல்

**நெருக்கடிக்கு முகம் கொடுப்பதற்கு உங்களுடைய வாகனத்திற்கு இயலுமா?**

உங்களுடைய வாகனம் சிறந்த தரத்தில் இருப்பதனை உறுதி செய்து கொள்ளவும். ரயர்களின் நிலைமையினை தினமும் பரிசோதனை செய்யவும். அதிகளவு வெப்பமான நேரத்தில் வெடிப்பதற்கு இடமுண்டு. சிறந்த தரத்தில் மேலுமொரு ரயர் இருப்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

கூரையிலும் பக்கங்களிலும் ஒட்டுங்கள். அப்போது தான் விமானங்கள் உங்களை அடையாளம் காணலாம். நீங்கள் ஒட்டும் பதாகைகளை தேவைப்படின் உடன் அகற்றக் கூடிய நிலையில் அவை இருத்தல் வேண்டும். வாகனம் பழுதுபட்டாலோ, புதைந்தாலோ இழுத்துச் செல்லக் கூடிய வசதி அமைந்ததாய் இருக்க வேண்டும். ஒவ்வொரு வாகனத்திலும் முதலுதவிப் பெட்டியும் தீயணைப்பு உபகரணமும் இருத்தல் அவசியம்.

சாரதி அனுபவசாலியாகவும் நிதானம் உடையவராயும் இருத்தல் அவசியம். அவர் வாகனத்தை கவனமாகச் செலுத்துபவராக இருத்தல் வேண்டும். சாரதி மீது உங்களால் நம்பிக்கை வைக்க முடியாதிருப்பின் விபத்து நேராத போதிலும் நீங்கள் மனக்களைப்படையலாம். இது உங்கள் தூக்கத்தைப் பாதிக்கலாம். நீண்ட காலத்திற்கென ஓர் சாரதியை நியமித்தால் உங்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு அவருக்கும் அளிக்கப்படுவதை உறுதி செய்யுங்கள். சாரதி யாரை அழைத்துச் செல்கின்றாரோ அவ்வினத்தையோ நாட்டையோ சேராதவராய் இருப்பின் சோதனைச் சாவடிகளில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

*(உ) சரியான ஆடைகளைக் கொண்டு செல்லுங்கள்*

நீங்கள் கொண்டு செல்ல வேண்டிய ஆடைகள் காலநிலை, தங்க வேண்டிய கால எல்லை என்பவற்றைப் பொறுத்தது.

**காலணி**

தேவைப்படின் நீண்டநேரம் நடப்பதற்கு வசதியாய் உங்கள் காலணி இருக்க வேண்டும். பாரமற்ற, நீரை உறிஞ்சாத காலணிகள் தரமானவை. அவை காலுக்கு வசதியாய் இருக்க வேண்டும். நீங்கள் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன் புதிதாக அவற்றை வாங்க வேண்டாம். பாதங்களுக்கு இரண்டு உறைகளை அணியக் கூடியதாய் இடவசதி இருக்க வேண்டும். உங்கள் ஆடை சம்பந்தமாகப் பார்க்கும் போது பாதணி மிக முக்கியமானதொன்றாக அமைகிறது.

**வசதியான ஆடையும் நூலாடையும்**

பல சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆடைகளை நீங்கள் அணிய வேண்டி வரும். மேலாடைகள் வசதியானவையாக அமைய வேண்டும். உள்ளாடைகள் நூலாடைகளாய் அல்லது இயற்கை துணிவகையினதாய் அமைதல் நன்று. உங்கள் ஆடை போர் வீரரின் ஆடைபோல் தோற்றம் கொண்டதாய் அமையக் கூடாது. உங்கள் ஆடை சீருடை போலல்லாமல் பலவர்ணம் கொண்டதாய் அமைவது நன்று. உங்கள் பையில் கவனத்தை ஈர்ப்பதற்குரிய பளிச்சென நிறம் கொண்ட துணியோ அல்லது வெள்ளைக் கொடியாய் பாவிப்பதற்கேற்ற வெண்ணிறத் துணியோ கைவசம் இருக்க வேண்டும். வெய்யிலுக்கும் குளிருக்கும் ஈடுகொடுக்கச் சிறந்த தொப்பியொன்றை கொண்டு செல்லுங்கள்.

**பாதுகாப்பு ஆடை**

துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் நீங்கள் அகப்பட்டால் உங்கள் ஆடை பாதுகாப்பு தரக்கூடிய ஆடையாய் அமைய வேண்டும். துப்பாக்கி ரவைகள் துளைக்க முடியாத ஜாக்கெட்டுகளை அணியுங்கள். இரும்புக் கவசத்தைவிட மட்பாண்ட கவசம் பாரமற்றது. ஆனால் கவனமாய்ப் பேணப்பட வேண்டும். ஜாக்கெட்டுகள் சிறிய ஆயுதங்களிலிருந்து உங்களைப் பாதுகாக்கும். கவசங்கள் சக்திவாய்ந்த ஆயுதங்களிலிருந்து உங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும். ஆனால் ஜாக்கெட்டும் இருபக்க கவசமும் 12 கிலோ (26 ராத்தல்) எடை கொண்டவை. இத்தோடு தலைக் கவசத்தையும் அணிந்து கொண்டால் அதிகநேரம் ஓடமுடியாது. பெண்களுக்கு பாதுகாப்பு ஆடைகள் உண்டு. இவை அதிக விலையானவை. படப்பிடிப்பாளர்கள் தமது கால்களை உயர்த்தி படம் எடுக்க வேண்டி இருப்பதால் தங்கள் கரங்களைப் பாதுகாக்கும் விசேட ஆடைகளை அணிய வேண்டும். எல்லா ஜாக்கெட்டுகளும் நீரை உறிஞ்சுதலாய் இருக்க வேண்டும். இவற்றின் விலை அதிகம். உங்கள் நிறுவனம் தங்களுக்கு கட்டுப்படியாகாது என்று கூறலாம். அச் சந்தர்ப்பங்களில் எவ்வாறு கட்டணத்தைப் பகிரலாம் அல்லது ஊடகச் சார்பு நிறுவனங்களிடம் உதவி கோரலாம் என்பது பற்றி அவர்களுடன் கதையுங்கள்.

பாதுகாப்பு ஆடைகளை அணிவதா இல்லையா என்பது பெரும் விவாதத்திற்குரியதொன்று. பாதுகாப்பு ஆடைகள் ஊடகவியலாளரின் வேகத்தைக் தணிக்கிறது. ஆனால் பாதுகாப்பு ஆடைகளை அணிவதா இல்லையா என்ற தெரிவு எல்லா ஊடகவியலாளருக்கும் கிடைப்பதில்லை. குறிப்பாக உள்நாட்டு ஊடகவியலாளருக்கு இந்த வரப்பிரசாதம் இல்லை. ஊடகவியலாளரால் அணியப்படாத கவச ஆடை வாகனத்தில் விடப்பட்டால் வாகனத்திற்குள் இருப்பவர்கள் தங்கள் பாதுகாப்பிற்காக அவற்றை அணியலாம்.




*ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யக் கோரி 1999 ஆம் ஆண்டு ஜுலை மாதம் கொழும்பில் வைத்து ஊடகவியலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது முகமூடி அணிந்து கலந்து கொண்ட ஊடகவியலாளரொருவர்.*

**படப்பிடிப்பு : *ஜனப்பிரிய சமரதிவாகர***

# பொதுவான பாதுகாப்புப் பற்றிய அறிவுறுத்தல்கள்

**எல்லா நேரங்களிலும் கையாளப்பட வேண்டிய தனிநபர் பாதுகாப்பு வழிகாட்டி**

- எந்நேரமும் அவதானத்துடனிருந்து, திடீர் என தோன்றக் கூடிய எவ்வித அபாயகரமான சூழ்நிலைக்கும் தயாராகவிருத்தல்.
- தொடர்ச்சியான காரியக் கிரமத்தினை தவிர்க்க வாகனங்களையும், செல்லும் வழிகளையும் மாற்றிக் கொண்டே இருங்கள்.
- பாதுகாப்பு வழிகளையும் மற்றும் வழிகாட்டிகளையும் கைக் கொள்வதில் நேர்த்தியாகவும், கண்ணியத்துடனும் நடந்து கொள்ளவும்.
- உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு உங்கள் நடவடிக்கைகளைக் குறித்து தெரியப்படுத்துங்கள். நீங்கள் எங்கு இருப்பீர்கள் என்றும், என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள் என்பதனையும் அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். துப்பரிவுகளை குறைந்தபட்சம் இன்னும் ஒருவருடமேனும் நடாத்துங்கள்.

  நடைமுறைகளைப் பின்பற்றுங்கள் - ஆனால் தேவை ஏற்படின் காரியங்களை முதன்மை ஏற்றுச் செய்ய அஞ்ச வேண்டாம்.

**தனிநபர் நடத்தை**

- நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கிய நிலமையைப் பேணுங்கள் (போதியளவு ஓய்வும், உடற்பயிற்சியும் எடுங்கள்).
- நேர்த்தியாக ஆடை அணிந்து பொதுமக்களுடன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளவும்.
- ♦முடிந்தளவு ஒரு குழுவுடன் வெளியில் செல்லுங்கள் அல்லது சனக் கூட்டம் இருக்கும் இடத்திற்குச் செல்லுங்கள். மற்றவர்கள் உங்களை மதிக்கும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள்.
- மற்றவர்களுக்கு உங்கள் மீது சந்தேகம் ஏற்படும் வகையிலான ஆடைகளை அணியாதீர்கள், உதாரணமாக இராணுவ ஆடை, துப்பாக்கியையோ அல்லது எதுவித ஆயுதத்தையோ உங்களுடன் கொண்டு செல்லாதீர்கள்.
- நீங்கள் சந்திக்கும் நபர்களோடு அல்லது உதவி செய்யும் நபர்களோடு அளவோடு உறவாடுங்கள். ஒரு நெருக்கடி ஏற்படும் போது உங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

- உங்களால் இயலாத காரியத்தை அல்லது உதவியை ஒரு போதும் செய்வீர்கள் என்று சத்தியம் செய்யாதீர்கள்.
- எவரும் உங்களுடன் பகைமையுடன் நடந்து கொண்டால் அமைதியாக இருங்கள், நேரத்தைக் கடக்க முயற்சியுங்கள், உயர் அதிகாரிகளுடன் கதைக்குமாறு கூறுங்கள், வேறொரு இடத்தினை உத்தேசியுங்கள். அந் நபரை தொடர்ந்து நோக்குங்கள். ஆனால் அவர் கண்களை நோக்காதீர்கள். நீங்கள் அந்நபருக்கு என்ன நடக்கிறது என்பதனை அறிந்திருக்கிறீர்கள் என்பதனை உணர்த்துங்கள்.
- எவரேனும் உங்களைக் கொலை செய்வதாக அச்சுறுத்தினால், அதனை உரிய அதிகாரிகளிடம் அறிவியுங்கள். தவறான தகவல்கள் ஏதும் கொடுக்காதீர்கள். தவிர்ப்பு முறைகளைக் கையாளுங்கள். (இடம் மாறுங்கள், செல்லும் வழியை மாற்றுங்கள்) எங்கிருந்து, யாரிடமிருந்து அச்சுறுத்தல் வந்தது என்பதனை அறியுங்கள். அந்நபரின் உடல், உள நிலைமைகளையும் எண்ணங்களையும் கணிப்பிடுங்கள். முடியுமானால் ஓர் பொது இடத்தில், பொலிஸ் நிலையத்தில் அவரை எதிர்கொள்ளுங்கள். அல்லது அவரைச் சந்திப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

### குண்டுத் தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

(அ) இனந்தெரியாத நபரொருவர், குண்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளதாக தொலைபேசி மூலம் அறிவித்தால் முயற்சி செய்து பின்வரும் கேள்விகளைக் கேளுங்கள்.

- குண்டு எப்போது வெடிக்கும்?
- அது எங்கே வைக்கப்பட்டது?
- அது எப்போது வைக்கப்பட்டது?
- அதன் தோற்றம் எவ்வாறு இருக்கும்?
- அது எவ்வகையான வெடி குண்டு?
- அது எவ்வாறு வெடிக்கும்?
- நீங்கள்அதனை வைத்தீர்களா?
- நீங்கள் ஏன் அதைச் செய்தீர்கள்?
- உங்களுடைய பெயர் என்ன?
- யார் நீங்கள்?
- நாம் உங்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது?

(ஆ) தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துபவரைக் குறித்து அல்லது அவர் எங்கிருந்து அழைப்பை ஏற்படுத்துகிறார் என்பதனைக் குறித்துக் கொள்ள முயற்சியுங்கள்.

- குரல் (தன்மை, உச்சரிப்பு, அழுத்தம், வேகம் மற்றும் பேசும் முறை)
- மொழி (தெளிவு, பகுத்தறிவு, செய்தியை புரிந்து கொள்ளும் முறை, பதிவு செய்தல்).
- பின்னணி (வீதி இரைச்சல், இசை, நொடிச் சத்தம்)
- நீங்கள் குரலினை அடையாளம் கண்டு கொண்டீர்களா?
- அழைப்பின் நேரமும் அதன் காலமும்

### சந்தேகத்துக்குரிய ஒரு பொருளை நீங்கள் காணும் போது செய்ய வேண்டியது என்ன?

- அதனை ஒரு போதும் தொட வேண்டாம், அது வெடிக்கப் போவதாகவோ அல்லது இயங்காமல் இருப்பது போல இருந்தாலும் அதனை தொட வேண்டாம்.
- அதில் நொடிச் சத்தம் அல்லது புகை வந்தால், அவ்விடத்தை உடனடியாக காலி செய்யுங்கள்.
- அப்பொருளைச் சுற்றி குறைந்தது 100 அடி பாதுகாப்பு வலயத்தினை உருவாக்குங்கள்.
- தொலைபேசியையோ, அல்லது எதுவித அலைவரிசை கொண்ட உபகரணத்தினையோ அதன் அருகில் பாவிக்காதீர்கள்.

### பொதி குண்டுகளை அறிந்து கொள்ளும் முறை

- சம்பந்தமில்லாத எடை, அளவு மற்றும் பரப்பைக் கொண்டிருத்தல்.
- பொதுவாக ஒரு உறுதியான பொதி அல்லது தபால் உறை
- பாரிய பொதியை கட்டுவதற்குப் பயன்படுத்திய பாரியளவு பொருட்கள்
- கவனத்தை திசை திருப்புவதற்கான குறிப்புக்கள் (சித்திரம், பெரியளவிலான பல முத்திரைகள்)
- பாரிய எண்ணிக்கையிலான முத்திரைகள்"அவசரம்", "அந்தரங்கமானது" அல்லது "கை மூலம்" என குறிக்கப்பட்ட பொதிகள்.
- உங்கள் தபால் வந்தடையும் இடத்திற்கு, இக் குறிப்புக்களின் பிரதி ஒன்றினைக் கொடுக்கவும்.

### நடை பயணம்

- இரவில் வேகத்தை விட, நிதானம் மிகவும் முக்கியமானது. காலநிலைக்கு ஏற்ற விதத்தில் உங்கள் ஆடை அமைய வேண்டும்.

- டேப் ரெக்கார்டர்களில், கமராக்களில், ரேடியோக்களில் இருக்கும் சிறு குமிழிகளை அணைத்து அல்லது மறைத்து விடுங்கள்.
- ஒளித்துக் கொள்ளும் இடங்களுக்கேற்ப நேர அட்டவணை அமைக்கப்பட வேண்டும். இருட்டான இடத்தில் இருங்கள், இடத்தை மாற்றுவதற்கு அஞ்ச வேண்டாம், அடிக்கடி நின்று, அவதானியுங்கள்.
- குழுவுடன் இருக்கும் போது, சந்திக்கும் இடங்களை முன் கூட்டியே தீர்மானியுங்கள்.
- வெளிச்சம் அல்லது ஒளி ஏற்பட்டால், நிலத்தில் குப்புர படுத்து வெளிச்சம் அகன்றவுடன் எழுங்கள். உங்களிடம் இருக்கும் ஒளிகளை (கருவிகளை) கவனமாகப் பாவியுங்கள்.

### ஓர் யுத்தப் பிரதேசத்தைக் கடக்கும் போது

- தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் தவிர யுத்த பிரதேசங்களைக் கடப்பதற்கு முயற்சிக்க வேண்டாம். கடப்பதற்கு முன்னம் திட்ட அட்டவணையை கவனமாகப் படியுங்கள் (முடிந்தால் பாடமாக்குங்கள்) உங்கள் வாகனத்தை பரிசோதியுங்கள்,
- முடியுமானால் குண்டு துளைக்காத ஓர் பாதுகாப்பு ஆடையை அணிந்து கொள்ளுங்கள். அப்பிரதேசத்தைக் கூடிய விரைவில் கடவுங்கள்.
- நீங்கள் ஊடகத்தை சேர்ந்தவர் என்பதற்கான அடையாளத்தை எடுத்துச் செல்லுங்கள். உ-ம் வாகனத்தில் 'ஊடகம்' என்ற சின்னத்தைத் தாங்கி பயணியுங்கள்.

### சோதனைச் சாவடியைக் கடக்கும் போது

- சோதனை செய்பவர்களை அவதானியுங்கள். அவர்கள் எவ்வாறான ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள், அவர்கள் அவற்றை கையிலா அல்லது தோளிலா சுமக்கிறார்கள், எவ்வளவு இளையவர்கள் (பயிற்றுவிக்கப்பட்டவர்களா அல்லது அனுபவமற்றவர்களா?) ஆடைகள் (சாதாரண அல்லது இராணுவ), அவர்கள் நடத்தை, கோபம் அல்லது பதற்றம் என்பவற்றிற்கேற்ப உங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.
- பாரிய அபாயம் ஏற்படும் போது திரும்பிச் செல்லுங்கள். இதனை கவனத்தை ஈர்க்காமல் துப்பாக்கிச் சூட்டிற்கு அகப்படாமல் செய்யுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வாகனங்கள் இருந்தால், ஒன்றின் பின் ஒன்றாகச் செல்லுங்கள்.
- சோதனையின் போது திடீர் என்று அசையாதீர்கள். கைகளை எப்போதும் தெரியும் படி வையுங்கள். அமைதியாகவும், நட்புடனும் நடந்து கொள்ளுங்கள்.

- பயந்து, அடங்கி அல்லது மூர்க்கத்தனமாக நடந்து கொள்ளாதீர்கள்.
- பல்வேறு அனுமதிப் பத்திரங்களை வைத்திருந்தால் தவறானதைக் காட்டி விடாதீர்கள்.
- உங்கள் மொழியை அறிந்தவர் யாரேனும் இருக்கலாம் என்பதனை மறந்து விடாதீர்கள், எனவே என்ன பேசுகிறீர்கள் என்பதனைக் குறித்து கவனமாய் இருங்கள்.
- அவசியமின்றேல், உங்கள் வாகனத்தை விட்டு வெளியில் வராதீர்கள். உங்கள் வாகனத்தின் என்ஜினை நிறுத்தாதீர்கள்.
- உங்கள் பொருட்களை அவர்கள் எடுத்துக் கொண்டால், உங்கள் விருப்பமின்மையை தெரியப்படுத்துங்கள், ஆனால் அளவுக்கு அதிகமாக செய்யாதீர்கள்.
- பேசிப்பாருங்கள், குழுத் தலைவனுடன் கதையுங்கள்.

## சில குறிப்புக்கள்

- நீங்கள் நிற்கும் விதத்தில் உங்களை ஓர் போராளி என்று கணிப்பிடாத வண்ணம் எச்சரிக்கையாய் இருங்கள்.
- கட்டிடமொன்றின் நடுவில் மறைந்துகொள்ளுங்கள். வெளியேறுவதற்காக பல வாசல்கள் உள்ளனவா, என்று பரிசோதியுங்கள். முடியுமானால் எல்லா வாசல்களிலும் தடையமொன்றினை வையுங்கள்.
- நீங்கள் வீடொன்றினுள் பிரவேசிக்கும் போது, கதவில் அல்லது யன்னல்களில் நிழல் விழாத வண்ணம் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- கட்டிடத்தினுள் நுழையும் போது, வாசலை தாண்டி உட்செல்லுங்கள். (இது பொதுவாக மனிதப் பொதிகள் வைக்கப்படும் இடம்). உள்ளே எதனையும் உடனடியாகத் தொடாதீர்கள். மத்திய அறை ஒன்றில் மறைந்து கொள்ளுங்கள், ஓட்டறையில் அன்றி மத்திய அறையில் பாதுகாப்பை பெறவும்.

### மறைந்திருந்து தாக்குதல் நடத்தப்பட்டால்

- வீதி மூடப்படாமல் இருந்தால் : அபாய வலயத்திலிருந்து அதிவேகமாக வெளியேறுங்கள்
- சரமாரித் துப்பாக்கித் தாக்குதலினால் வீதி அடைக்கப்பட்டால் வாகனத்தை விட்டு கவனமாக வெளியேறுங்கள்
- வாகனத்தின் அருகில் இருங்கள் (கவனமாய் இருங்கள் : என்ஜின் பிரதேசம் மாத்திரமே துப்பாக்கிச் சூட்டிலிருந்து உங்களைப் பாதுகாக்க வல்லது).

- வீதியோரங்களில் மிதிவெடிகளின் அபாயம் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள்.
- சரமாரித் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக பாதை தடைப்பபட்டிருப்பின், உங்கள் வாகனத்தை துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறாத எதிர் பக்கத்தில் நிறுத்துங்கள்.
- துப்பாக்கிப் பிரயோகம் மிதிவெடி தொடர்பாக எச்சரிக்கையாக இருந்து இயலுமான வரை பாதுகாப்பை நாடுங்கள். தாக்குதலில் ஈடுபடுவோர் வாகனங்களை சோதனை செய்வதற்கோ அல்லது கொள்ளையிடுவதற்கோ காயமடைந்தவர்களை கொலை செய்வதற்கோ அண்மித்த வண்ணம் இருக்கலாம்.
- பாதை பின்புறத்தில் தடை செய்யப்பட்டிருப்பின் மறைந்திருந்து தாக்குதலுக்கு இலக்காகி இருப்பின் வாகனம் உங்களுடையதல்லாவிடின் அதனை பின்னால் எடுங்கள் அல்லது திருப்பிக் கொள்ளுங்கள். தப்பியோட முயலும் ஏனைய வாகனங்களுக்கு தடை செய்யாமல் இருக்க எச்சரிக்கையாய் இருங்கள்.

## நீங்கள் பணயக் கைதியாக்கப்பட்டால்

பணயக் கைதியின் கண்ணோட்டம் அவரைக் கைது செய்தவர்களின் தன்மை, சூழ்நிலைக்கேற்ற விதத்திலேயே தங்கியுள்ளது. இருந்த போதும், கீழ்வரும் குறிப்புக்கள் பொதுவாக பணயக் கைதி ஒருவரின் நடத்தையைத் தீர்மானிக்கும்.

- எதிர்ப்புத் தெரிவிப்பதும் தப்பிச் செல்வதும் பயன் அளிக்கும் என்று கருதினால் மாத்திரம் அவ்வாறு செய்யவும்.
- பதற்றப்படாதீர்கள், அமைதியாகவிருங்கள், உங்களைக் கைது செய்தவர்கள் ஏற்கனவே ஓர் பதற்ற நிலையில் இருக்கக் கூடும்.
- இலகுவான பயனுள்ள விடயங்களை மாத்திரம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இது பின்னர் உதவும் : குரல்கள், நறுமணம், துர்நாற்றம் சத்தங்கள், நேரம் மற்றும் பாவிக்கப்பட்ட பிரயான முறை.
- உங்களை கைதுசெய்தவர்களின் நடத்தையை அவதானியுங்கள். நீங்கள் தப்பிக்கக் கூடிய வழிவகைகளைத் தேடுங்கள், அவர்களை அடையாளம் கண்டு கொள்ள முயற்சி செய்யுங்கள்.
- உங்கள் நாளாந்த நடவடிக்கைகளை மனதில் திட்டமிடுங்கள்.
- உங்களை கைது செய்தவர்களின் கட்டளைகளுக்கு கட்டுப்படுங்கள், ஆனால் அவர்களின் நோக்கங்களுக்கு உதவாதீர்கள்.

- அவர்கள் உங்கள் பெயரைப் பாவிப்பதற்கு ஊக்குவியுங்கள். இது பதற்றத்தைக் குறைக்க உதவும்.
- கொலை அச்சுறுத்தல்கள் அல்லது விடுவிப்பு நம்பிக்கைகள் ஆகியவற்றை நம்பாதீர்கள்.
- யாருடனாவது கதைக்க முயலுங்கள். இது உங்கள் மனதை வேறு திசையில் வைத்திருப்பதற்கு உதவும்.
- உங்களை கைதுசெய்தவர்களுடன் தேவையின்றி மோதாதீர்கள். அவர்களோடு உறவாடுங்கள். கோபத்துடனோ அல்லது கோபம் ஏற்படுத்தும் விதத்திலோ நடந்து கொள்ளாதீர்கள்.
- தயவை எதிர்பார்ப்பது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சுவார்த்தைகள் (விடுவிப்பு) இழுபறியாகக் காணப்பட்டால் மனந்தளராதீர்கள். பாதிப்பின்றி வெளியேறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டே இருக்கும்.
- கேட்கப்பட்டால், உங்கள் குரலை ஒலிப்பதிவு செய்வதற்கோ அல்லது உங்களை அடையாளப்படுத்துகின்ற செய்தி ஒன்றினை எழுதுவதற்கோ முன் வாருங்கள்.
- விடுவிக்கப்படுவதற்கு முன்னைய நாள் பதற்றப்படாமல், உங்களைக் கைது செய்தவர்களின் உத்தரவுகளுக்குக் கட்டுப்படுங்கள்.
- விடுவிப்பின் பின்னர் நீங்கள் ஓர் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவீர்கள். இது தவிர்க்க முடியாதது. யாரிடமாவது உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளுங்கள். உங்கள் அனுபவங்களைக் கருத்துத் தெரிவிக்க உங்களுக்கு மாத்திரம் கட்டுப்படுத்த வேண்டாம்.
- செய்தி ஊடகத்திடம் கதைக்கும் முன்னர், கொடுக்கப்படும் அறிவுரைகளைப் பின்பற்றுங்கள்.
- முன்னைய கடத்தல்காரர்களின் மீள் நடவடிக்கைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுங்கள்.

## அபாயகரமான பிரதேசங்களில் அல்லது யுத்த சூழ்நிலைகளில் வேலை செய்யும் ஊடகவியலாளர்களுக்கான

# பாதுகாப்பு தொடர்பான உடன்பாட்டு வாசகம்

சர்வதேசச் சட்டங்கள் யுத்த பிரதேசங்களில் வேலை செய்யும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக அமுல்படுத்தப்பட்ட போதும், இன்று யுத்தம் செய்யும் குழுக்கள் இவற்றிற்கு மதிப்பளிக்காததினால் அவர்களின் பாதுகாப்பிற்கு எதுவித உத்திரவாதமுமில்லை. செய்தி / தகவல் திரட்டுபவர்கள் தமக்கு முழுப்பாதுகாப்பும் கிடைக்கும் என நம்பமுடியாது. எனவே ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் (முழு நேர அல்லது சுதந்திர ஊடகவியலாளர்கள்) அபாயங்களைக் கருத்தில் கொண்டு அவர்களை வேலைக்கமர்த்துபவர்கள் அவர்களுக்கு பாதுகாப்பும், நஷ்ட ஈடும், உத்தரவாதமும் அளிக்க வேண்டும். இதற்கு வெறுமனே இராணுவத்தினரையும், அரச அதிகாரிகளையும் மட்டும் நம்பி இருக்கக் கூடாது. ஊடக நிர்வாகிகள் அபாயத்தைக் குறைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். பின்வரும் எட்டு கொள்கைகளும் இதனுள் அடங்கும்.

### அடிப்படைக் கொள்கை 1 – அர்ப்பணிப்பு

ஊடகவியலாளர்களும், ஊடகம் மற்றும் பொது அதிகாரசபைகளை ஒத்த சூழ்நிலைகளில் மற்றும் அபாயகரமான சூழ்நிலைகளில் அபாயத்தினைக் குறைப்பதற்காய் பெறப்பட்ட தகவல்களை பரிமாறிக் கொள்ள வேண்டும். ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடகவியலாளர்கள், உள்ளூர் ஊழியர்கள் மற்றும் ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு போதியளவு தயார்படுத்தல், தகவல், காப்புறுதி மற்றும் கருவிகள் வழங்கப்பட வேண்டும்.

### அடிப்படைக் கொள்கை 2 – சுயவிருப்பத்துடன் நடந்து கொள்ளல்

ஊடகவியலாளர்கள் அர்ப்பணிப்புடனும், அபாயங்களை அறிந்தும் தம் விருப்பத்துடனேயே யுத்தப் பிரதேசத்தில் வேலை செய்கிறார்கள். இவற்றில் அபாயம் இருப்பதனால் ஊடகவியலாளர்கள் இந்த பிரதேசங்களுக்குச் செல்ல மறுப்பு தெரிவிக்கும் போது அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். வெளித்தளத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது, ஊடகவியலாளர்கள் வேலையை இடை நிறுத்திக் கொள்ள விரும்பினால், அதனை இரு சாராரும் (செய்தியாளரும், ஆசிரியர்களும்) ஓர் முடிவிற்கு வந்ததன் பின்னர் அவ்வாறு

செய்யலாம். பத்திரிகை ஆசிரியர்கள் ஊடகவியலாளர்கள் மீது அளவுக்கதிகமான அழுத்தத்தை ஏற்படுத்தாத வண்ணம் கவனமாகவிருத்தல் வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 3 – அனுபவம்

யுத்த சூழ்நிலைகளில், அல்லது அபாயகர சூழ்நிலைகளில், அபாயம் அதிகமாகக் காணப்படுவதினால், பத்திரிகை ஆசிரியர்கள் இப்பணிகளுக்கு அனுபவமிக்க, திறமைமிக்க ஊடகவியலாளர்களையே அனுப்ப வேண்டும். முதல் தடவையாக யுத்த சூழ்நிலைகளில் வேலை செய்யப் போகும் ஊடகவியலாளர்களுடன், அனுபவமிக்க, திறமைமிக்க ஊடகவியலாளர்களை அனுப்ப வேண்டும். முதல் தடவையாக யுத்த சூழ்நிலைகளில் வேலை செய்யப் போகும் ஊடகவியலாளர்களுடன், அனுபவம் மிக்க ஊடகவியலாளர்களும் செல்ல வேண்டும். வெளிக்களத்தில் குழு செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஊடகவியலாளர்கள் களத்திலிருந்து திரும்பும் போது பத்திரிகை ஆசிரியர்கள் அவர்களுக்கு அனுபவத்தையூட்டும் விதத்தில் ஒழுங்குமுறைப்படி மீள அறிவித்தல் வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 4 – தயார்படுத்தல்

தொடர்ச்சியான தயார்படுத்தல் யுத்த சூழ்நிலைகளில் ஊடகவியலாளர்களின் அபாயத்தினைக் குறைப்பதற்கு உதவும் ஆசிரியர்கள் தேசிய அல்லது சர்வதேச பயிற்றுவிப்புக்கள் இடம்பெறும் போது அவற்றைக் குறித்து தமது ஊழியர்களுக்கு அறிவிக்க வேண்டும். முரண்பாட்டுச் சூழ்நிலைகளில் வேலை செய்யும் அனைத்து ஊடகவியலாளர்களும் முதற் சிகிச்சை பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். அனைத்தும் அறியப்பட்ட ஊடகவியலாளர் பள்ளிக் கூடங்களுக்கும் இவற்றைப் பின்பற்ற வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 5 – பாதுகாப்பு

பத்திரிகை ஆசிரியர்கள் அபாயகரமான சூழ்நிலைகளில் வாழும் ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்பு கருவிகள் (குண்டு - துளைக்காத - ஆடைகள், தலைக்கவசங்கள், கூடுமானால் இயந்திர வாகனங்கள்), தொடர்பாடல் கருவிகள், பாதுகாப்பு மற்றும் முதல் சிகிச்சை பொருட்களை வழங்க வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 6 – காப்புறுதி

அபாயகரமான சூழ்நிலைகளில் வாழும் ஊடகவியலாளர்களுக்கும், அவர்களின் உதவியாளர்களுக்கும் சுகயீனம், மீள் அனுப்புதல், உயிர் இழப்பு வேலைகளில் காப்புறுதி வழங்கப்பட வேண்டும். அபாயகரமான பணிகளுக்கு

அனுப்புவதற்கு முன் உரிய அதிகாரிகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்கள் சகல உடன்படிக்கைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும் கைக்கொள்ளப்பட வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 7 – உளவியல் பராமரிப்பு

யுத்த அல்லது அபாயகரமான சூழ்நிலைகளிலிருந்து திரும்பும் ஊடகவியலாளர்களுக்கும், அவர்கள் பதவியாளர்களுக்கும் உளவியல் பராமரிப்பு வழங்கப்படல் வேண்டும்.

## அடிப்படைக் கொள்கை 8 – சட்டப்பூர்வ பாதுகாப்பு

ஜெனிவா ஒப்பந்தத்தின் 79வது உறுப்புரைக்கு பங்கம் விளைவிக்காத வண்ணம், யுத்தத்திற்கு சார்பின்றி, அல்லது உளவாளியாக இல்லாமல் இருந்தால் அபாயகரமான சூழ்நிலைகளில் வேலை செய்யும் ஊடகவியலாளர்கள் அவ்வொப்பந்தத்தின் கீழ் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். ஊடகவியலாளரை குறி வைத்து இடம்பெறும் கொலை அல்லது பாரதூரமான உடல் காயப்படுத்தல், இவ்வொப்பந்தத்தின் படி யுத்த குற்றச் செயலாக கணிப்பிடப்படும். .



*1998ஆம் ஆண்டு நடைபெற்ற வட மேல் மாகாண தேர்தலில் வாக்கு கொள்ளையில் ஈடுபடும் அரசாங்க கட்சியின் குண்டர்கள்.*

***படப்பிடிப்பு: ஜனப்பிரிய சமரதிவாகர***

# யுத்த வலயங்களும் மோதல் பிரதேசங்களும்

துப்பாக்கி ரவைகள் பறக்க ஆரம்பிக்கும் போது ஊடகவியலாளர்கள் தவறாகவோ வேண்டுமென்றோ இலக்காகலாம். முன்னணி ஊடகவியலாளர்கள் துப்பாக்கி ரவைகள், ஷெல்கள், மோட்டார்கள் என்பவற்றால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். திடீர் தாக்குதல்களின் போதும் ஊடகவியலாளர் பலியாகியிருக்கின்றார்கள். அநேக படைகள் யுத்தத்தில் ஈடுபடும் போது யுத்தம் எங்கே ஆரம்பித்து முடிவடைகிறது என்று சொல்லுவது கடினம். இருப்பினும் ஆபத்துக்கள் பற்றி அறிந்து வைத்திருக்கும் ஊடகவியலாளர் முன்கூட்டியே சிந்திப்பதன் மூலம் காயப்படுவதிலிருந்தும் உயிரை இழப்பதிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.

முன்னறிவே ஓர் ஊடகவியலாளரின் சிறந்த பாதுகாப்பு. போரில் ஈடுபட்டிருப்போரின் மனோநிலை பற்றிய அறிவு, பாவிக்கப்படக் கூடிய ஆயுதங்கள் பற்றிய அறிவு இவை மூலம் ஊடகவியலாளர் தனக்கு நேரிடக் கூடிய ஆபத்துக்களைத் தவிர்க்கலாம். ஊடகவியலாளர் எந்த நடவடிக்கை தம்மை துப்பாக்கிப் பிரயோக மையத்திற்குள் சிக்க வைக்கும், எந்த நடவடிக்கை தம்மை ஆபத்தான இடத்திலிருந்து பாதுகாப்பான இடத்திற்கு இட்டுச் செல்லும் என்பதை எடைபோட வேண்டும். தாம் நிற்கும் பூகோள எல்லை மற்றும் இராணுவ நிலை என்பது பற்றிய படம் அவரது மனதில் இருக்க வேண்டும். யுத்த சூழ்நிலையில் இருக்கும் மற்றவர்கள் போல ஊடகவியலாளர் ஆகக் குறைந்த ஆபத்தான செயல்நடவடிக்கையைத் தெரிந்து கொள்ளலாமே தவிர ஆபத்தே இல்லாத நடவடிக்கை எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

## ஊடகவியலாளர் பற்றிய போராளிகளின் மனப்பாங்கு

ஊடகவியலாளர் இராணுவப்படையினர் என்பவர்களின் நோக்கம் இலக்கு என்பவை வேறு வேறானவை. என்ன நடக்கிறது என்பது பற்றி தகவல் திரட்ட அணுகுதலை எதிர்பார்க்கிறார்கள். ஊடகவியலாளர் இராணுவப் படைகள் நிலைமையை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதைப் பற்றியும் வெற்றி பெறுவதைப் பற்றியும் நோக்காய் இருப்பார்கள். தாங்கள் காட்டவிரும்பும் அம்சங்களையே ஊடகவியலாளர் அறிவிக்க வேண்டும் என்றே அவர்கள் விரும்புவார்கள்.

போர்வீரர்களும் இராணுவத்தினரும் அனேகமாக ஊடகவியலாளரை சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றார்கள். முன்னணியில் நிற்கும் படையினருக்கு தாங்கள் படம் பிடிக்கப்படுவது விருப்பமாக இருக்கலாம். ஆனால் இராணுவத் தளபதிகள் ஊடகவியலாளரின் பிரசன்னத்தை பெரிதும் விரும்புவதில்லை. ஊடகவியலாளரை ஓர் தேவையில்லாத தலையிடியாகவும் பாதுகாப்பிற்கு

ஆபத்து உருவாக்குபவர்கள் என்றே தளபதிகள் அவர்களைப் பார்க்கின்றார்கள். சந்தர்ப்பத்தை பொறுத்து எல்லா ஊடகவியலாளரையும் அல்லது பலரை எதிரியின் பிரசாரகர்களாக தளபதிகள் பார்க்கக் கூடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஊடகவியலாளர்கள் சுடப்பட முடியாத அவர்களின் எதிரிகளாக கணிக்கப்படுகின்றார்கள்.

எங்கெல்லாம் முடியுமோ அச்சந்தர்ப்பங்களில் இராணுவப் படைகள் தமக்குச் சாதகமாகவே செய்தி அறிவிப்பு இருக்க வேண்டும் என்று விரும்புவர். தளபதிகள் தமது அலுவலகங்களைக் கொண்டு ஊடகவியலாளருக்கு தவறான தகவல்களைத் தரவும், பிரசாரம் செய்யவும், உண்மையை மறைக்கவும் செய்கின்றார்கள். கோபம் கொண்ட தளபதிகள் ஒத்துழைக்க மறுப்பதோடு ஊடகவியலாளரை சுட்டுக் கொல்லவும் முன்வரலாம். இராணுவங்கள் ஊடகவியலாளருக்கு சேவையும் பாதுகாப்பும் தந்து அதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் முன்வரலாம்.

மூத்த தளபதிகளுக்கு சாதகமான அறிக்கையின் மகிமை புரியும். பொதுமக்களுக்கெதிரான குற்றச்செயல்களை தம் படையினர் இழைக்கவில்லை என்னும் போது அது அவர்களுக்கு நற்பெயரைத் தேடித் தருகிறது. ஆனால் பெரும்பாலும் சோதனைச் சாவடிகளில் அதிகம் பயிற்சி, அனுபவம் இல்லாத அனைத்து, விரக்தி அடைந்த இளம் வீரர்கள் நிறுத்தப்படுகின்றார்கள். இவர்கள் ஊடகவியலாளரைக் கொள்ளையடிக்கவும் கொல்லவும் கூட முன்வருவர். யுத்த சூழலுக்குள் உட்செல்ல முன்னர் ஊடகவியலாளர் வெவ்வேறு படையினர் பார்வையில் நிலமையை எடைபோட்டுக் கொள்ள வேண்டும். களத்திலிருக்கும் படையினரின் உற்சாகம், கட்டுப்பாடு, மனப்பாங்கு என்பன பற்றிய அறிவு ஊடகவியலாளருக்கு அவசியம். மோதல், வாக்குவாதம் ஏற்படும் போது சமாளிக்கக் கூடிய நல்ல உறவுகள் கையாடு திறன் அவர்களுக்கு அவசியம்.

## இராணுவப் பாதுகாப்போடு அல்லது தனியாக பயணம் செய்தல்

யுத்த களத்தின் முன்னணிப் பகுதிக்கு இராணுவத்தினர் உங்களை அழைத்துச் செல்லக் கூடியவர்கள். இருப்பினும் சில தடங்கல்கள் பற்றி நீங்கள் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். சில நாடுகளில் நீங்கள் படையினருடன் சென்றால் நீங்கள் கொல்லப்படுவதற்கான இலக்காக மாறலாம். இராணுவத்துடன் நீங்கள் சென்றால் அவர்கள் சொல்லுவதையே நீங்கள் செய்ய வேண்டும். துப்பாக்கிச் சூடு இடம்பெற்றால் அவர்கள் தமது உயிரையும் தங்கள் படையினரின் உயிரையும் உங்கள் உயிரையும் காப்பாற்றுவதிலேயே நோக்காக இருப்பார்களே ஒழிய உங்கள் படப்பிடிப்புக் கருவியையோ உங்கள் அறிக்கை ஆவனங்களின் பாதுகாப்பையோ அவர்கள் சிந்திக்க மாட்டார்கள். யுத்த நிலையில் இல்லாத சிப்பாய்கள் போர் வீரர்களுக்கு தீர்மானமெடுப்புப் பலம் கிடையாது. எனவே உங்களுடன் பயணம் செய்பவர் ஓர் மூத்த நிலை அலுவலகம் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். ஹெலிகொப்டர், விமானங்கள் சண்டை நடக்கும் இடங்கள்

**அவர்களிலொருவரென நீங்கள் கருதப்பட்டு இலக்காகலாம்**

நீங்கள் இராணுவத்துடனோ அல்லது மோதலொன்றின் ஒரு தரப்பினரொருவருடன் பயணஞ் செய்தால், நீங்கள் படைவீரர் என அடையாளங் காணப்படுவதினால் அல்லது நீங்கள் எதிரிகளுடன் தொடர்புடையவர் என கருதப்படுவதினாலோ நீங்கள் இலக்காகக் கூடிய ஆபத்துக்கள் உள்ளன.

## நிலவெடிகள் மற்றும் சிறு பொறிகள் (Booby Trats)

**பொறிகள் சம்பந்தமான பொதுவான தகவல்** - பொறிகள் பாதுகாப்பின்மையின் உணர்வினை கொண்டு வருவதற்காகப் பாவிக்கப்படுகின்றன.

**கீழ் குறிப்பிடப்படுபவற்றை ஈர்த்துக் கொள்ளவோ அல்லது வெளியில் எடுத்துக் கொள்வதற்காகவோ சிறு பொறிகள் தயாரிக்கப்பட்டுள்ளது.**

- உள்ளுணர்வுகள் (பேராசை, ஆசை, வாழ்தல்)
- தேவைகள் (உணவு பெற்றுக் கொள்ள, உடை அணிய, குளிரிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள, சப்பாத்து அணிய, கதவினை அல்லது யன்னலை துறக்க ஆகிய) உணர்வுகளை தூண்ட, அல்லது ஆவர்த்தை தூண்ட அல்லது வெளிக் கொணர பாவிக்கப்படுகின்றன.
- துலங்களை உருவாக்க ( மின் குமிழி எரிகின்றதா என பார்ப்பதற்கு அதனை பற்றவைத்தல், ஓர் பொருளை உதைய, ஓர் காரை இயக்குதல் போன்றவை)

**மிதி வெடி வகையைச் சார்ந்த ஒரு சிறு பொறி வெற்றிகரமாக வெடிக்க வேண்டுமாயின் அதனுடைய தோற்றத்தில் ஒரு மாற்றம் ஏற்பட வேண்டும்**

அதன் மூலம் இரு வகையான விளைவுகள் ஏற்படும். போலித்தனமான அச்சுறுத்தலும் அதன் பின்னர் வெற்றிகரமான தோற்றமும்.

**பொறிகள் பாவிக்கப்படும் இடங்கள்**

**வசிப்பிடங்களில் :** கதவுகள், யன்னல்கள், தரை, தளபாடம், தொலை பேசிகள், தொலை காட்சிகள், மின்சார உபகரணங்கள், புத்தகங்கள், அலார கடிகாரங்கள், கட்டில்கள், துணி மணிப் பெட்டிகள். சமயலறைகளில் : கேத்தில்கள், சாப்பாட்டுக் கிண்ணங்கள், போத்தல்கள் ஆகியன.

**வெளி இடங்களில் :** சாப்பாட்டுக் கடைகளில், பாலங்களில், இயற்கை மறைவிடங்களில், வாகனங்களில், கைவிடப்பட்ட ஆயுதங்களால், கைக் குண்டு மற்றும் வேறு வெடி குண்டுகள், ஆகியன.

**சில குறிப்புக்கள்.**

- நீங்கள் ஓர் வயர் நிலவெடியுடன் பொருத்தப்-பட்டிருப்பதைக் கண்டவுடன் உரிய அதிகாரிகளுக்கு அதனைக் குறித்து தெரிவியுங்கள்.
- நிலவெடிகள் தனித்திருப்பது அரிது என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள். அவை அரை டசின்களாக அல்லது பல டசின்களாக அல்லது வரிசையாக (அநேகமாக நிலத்தில் குச்சிகள் நாட்டப்பட்டு) புதைக்கப்பட்டிருக்கும்.

- 😐 வழியை விட்டு ஒரு போதும் விலகிச் செல்லாதீர்கள். மலசலம் கழிப்பதற்கேனும் செல்லாதீர்கள்.
- 😐 வெடிக்காமல் காணப்படும் குண்டினையோ அல்லது ராக்கட்டினையோ ஒரு போதும் தொடாதீர்கள்.
- 😐 ஞாபகப் பொருட்களாக நிலவெடிகளை வாங்காதீர்கள். பிறரையும் அவற்றை செயலிழக்கச் செய்து ஞாபகப் பொருட்களைக் கொண்டு செல்ல ஊக்குவிக்காதீர்கள்.

யுத்தப் பிரதேசத்திலிருந்து, ஊடகவியலாளர்கள் தகவல் அறிவிக்கும் போது, நிலவெடிகளில் அல்லது மனிதப் பொறிகளின் அபாயத்துக்கு முகங்கொடுக்க நேரலாம். நிலவெடிகள் கீழ் குறிப்பிட்ட வண்ணம் அல்லது உரிய பயிற்சி பெறாத போராளிகளால் ஊகிக்க முடியாத விதத்தில் புதைக்கப்பட்டிருக்கும். ஓர் வெடி குண்டு பின்வரும் காரணங்களினால் செயற்பட முடியும். ஓர் தடுக்கல் வயரினால், அமுக்கம் (அல்லது அமுக்கத்தை இழக்கச் செய்தல்), கடிகார வெடிகுண்டு ("smart") வெடிகுண்டுகள் சில நபர்கள் அல்லது வாகனங்கள் கடந்த பின்னரே வெடிக்கும்).


ஒருவர் நிலவெடியை கண்டவுடன், தமது பாத அடிகளை மிகக் கவனமாக வைக்க வேண்டும்.

### நிலக்கண்ணி வெடியொன்றின் சாதாரண தோற்றம்

1. வெடித்தல்
2. தோட்டாவில் உள்ள வெடி (முன்புறத்திற்கு உந்தப்படும் வெடியும் உள்ளடக்கக் கூடும்)

### சில தனிநபர் அல்லது நில வெடிகள்

PMR மற்றும் FROM ஆகிய நிலவெடிகளின் வயர்கள் வெப்பநிலைக்கும்,






*பலவித கோணங்களின் அளவுகளில் வெடி குண்டுகள் உள்ளன. அவற்றில் அதிகளவு சக்தி கொண்டது. உலோகப் பாதுகாப்பில் அமைக்கப்பட்டுள்ள ஈயமாகும். மேலே இருக்கின்ற குண்டு பாவனைக்காக எடுக்கப்படும் வெடி குண்டாகும். கூரான குண்டு 7.62 செப்பு படையொன்றினைக் கொண்ட சுற்றாகும். சிறிய வட்டங்களைக் கொண்ட குண்டுகள் கைத்துப்பாக்கி மற்றும் சப் மெஷின் துப்பாக்கிகளுக்கான மி.மீ. 9 பந்து ரவைகளாகும். சிறிய வெள்ளிக் குழாய் வெற்று ரவையாகும்.*

காலநிலைக்கும் ஏற்பவே வெடிக்கும். மரத்திலிருந்து விழும் கிளைகள், மூடு பனி ஆகியன இந் நிலவெடிகளின் பகுதிகளை சிறிது சிறிதாக வெளிப்படுத்தி செயற்பட வைக்கக் கூடும். இவை எந்நேரமும் வெடிக்கலாம். வசந்த காலங்களில் இந்த அபாயம் அதிகமாகக் காணப்படுகின்றது. நிலவெடிகள் நேர வெடிக் குண்டுகளாக மாறுகின்றன.

### PMR- 2 A

இது அதிகமாக பிரயோகிக்கப்படும் நிலவெடி. இது கம்பியில், தடியில் அல்லது மரத்தில் வைக்கப்படுகிறது (தேவையான உயரத்திற்கு கிளைகள் வெட்டப்படுகின்றன.)






### PMA - 2

இவை ஏனைய நிலவெடிகளை பாதுகாப்பதற்காக பாவிக்கப்படுகின்றன. பச்சை நிறத்தில் தயாரிக்கப்பட்டு (பிளாஸ்டிக்), நட்சத்திர வடிவ இக்னிஷனி-னால் செயற்படுத்தப்படுகிறது. 100 கிராம் வெடி மருந்து இதனை அதிபயங்கர வெடியாக்குகின்றன.

### PMA - 3

தனியாகவோ, மூன்று அல்லது நான்கு அடி தூரத்திலோ, வரிசை-யாகவோ, யுத்த பிரதேசத்திலிருந்து 20 மீட்டர் தூரத்திலோ இவை நிலத்தில் புதைக்கப்படுகின்றன, மூடப்பட்டிருக்கும், தன் அழுத்தி (Trigger) எப்போதும் வெளியில் காணப்படும்.



**PROM - 1**

இவை புதைக்கப்பட்டு அல்லது கற்கலால் மூடப்பட்டிருக்கும். இதன் அழுத்தி அவ்வளவு இலகுவில் செயற்படுத்தப்பட முடியாது.





**MRUD**

அனேகமாக மரங்களில் பொருத்தப்பட்டிருக்கும, இவை மஞ்சல் நிற வயர்களின் மூலம் ஏனையவற்றுடன் பொருத்தப்பட்டிருக்கலாம். இவ்வெடிகளின் நோக்கம் ஒருவரை கொல்லுவதல்ல, மாறாக காயப்படுத்துவதே. பாதிக்கப்பட்டவருக்கு கிட்டத்தட்ட 7 பேரினது உதவி தேவைப்படும். ஆனால் குறி பார்த்து தாக்கப்படும் போது 20 மீற்றர் பரப்பினுள் இது ஒருவரை கொலை செய்யவல்லது.

**நீங்கள் நிலக்கண்ணி வெடிகள் அடங்கிய வலயத்திற்குள் சென்றால்**

**மறைந்திருந்து வெடி வைத்தல்**

ஸ்னைப்பர் துப்பாக்கி தாரிகள் தமது குறிகளை சுமார் 600 மீற்றர் தூரத்திலிருந்து தாக்கலாம் ( சில நேரம் 1,000 மீற்றர்) பகல் வேளையில், இரவு நேரங்களில் 300 மீற்றர். ஆனால் அனேகமாக இவர்கள் அண்மையிலிருந்தே தாக்குவார்கள். இது அவர்கள் தவறு விடுவதை குறைக்கும். இவர்கள் இரவிலும் பனி நேரத்திலும் வெவ்வேறு வகையான ஆடைகளைப் பாவிப்பார்கள். இவர்கள் அதிகமாக ஒரு கட்டிடத்தின் அறையில், மேல் மாடியையும், கட்டிடத்தின் முன் பகுதியையும் தவிர்த்து தம்மை தயார்படுத்திக் கொள்ளவார்கள். (வரை படம்1) மேலும் இவர்கள் ஓட்டறைகள், மண் மூடைகள் அடுக்கப்பட்ட இடம் ஆகியவற்றில் இருப்பார்கள்.

இரவில் பயணஞ் செய்யாதீர்கள். ஒருவரொருவராக விலகி தனி வரிசையில் நடந்து செல்லவும். சிறிய பாதைகளில் செல்ல வேண்டாம். தடைகளுக்கு மேல் ஏற வேண்டாம். சிதைவடைந்த இடங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டாம். நீரில் மூழ்கிய இடங்களில் கவனமாக இருக்கவும். நீரிற்கு அடியிலும் மிதி வெடிகள் இருக்கக் கூடும்.

**எதிரொலிப் பிரச்சினை**

துப்பாக்கி சூட்டின் சத்தம் சுமார் செக்கனுக்கு 330மீற்றர் பிரயாணம் செய்யும்




***1 வது வரைபடம்***

தொலைவிலிருந்து வெடி வைக்கும் ஒருவர் அனேகமாக இருக்கக் கூடும்.

***2 வது வரைவடம்***


கட்டிடமொன்றுக்குள் வெடி வைக்கும் பொழுது இருக்கக் கூடும்.





***3 வது வரைபடம்***

கூரையொன்றிற்குள் வெடி வைக்கும் இடங்கள்



***4 வது வரைபடம்***

அதே வேளையில், துப்பாக்கிக் குண்டு சுமார் செக்கனுக்கு 1,000 மீற்றர் வேகத்தில் பிரயாணம் செய்யும். திறந்த வெளியில் துப்பாக்கி சூடு எங்கிருந்து வந்தது என்பதனை அடையாளம் காண்பது எளிது. சுடுபவருக்கும், உங்களுக்கு-மிடையில் அனேக தடங்கள் காணப்-பட்டால் அச்சூடு பல இடங்களிலிருந்தும் வந்தது போல் எதிரொலிக்கலாம். சுடுபவர் அதன் சத்தத்தை முதலில் கேட்பார். பின்பு அதன் எதிரொலி தொடரும். முதல் சத்தம் குறுகியதாகவும் தெளிவாகவும் இருக்கும், அதேவேளை இரண்டாம் சத்தம் நீண்டதாயும் தெளிவற்றும் காணப்படும். (வரைபடம் 4)



***5 வது வரைபடம்***

வரைபடத்தில் காட்டப்பட்டது போல் ஸ்னைப்பருக்கும் அவர் குறிக்கும் இடைப்பட்ட ஒலியின் காலம் குறுகியது, ஆனால் எதிரொலியானது குறியைச் சென்றடைவதற்கு அனேக தூரம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. இது துப்பாக்கிச் சூட்டிற்கும், எதிரொலிக்குமிடையில் வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. இதன் மூலம் துப்பாக்கிச் சூட்டின் சத்தத்தை சரியாக அறிய முடிகிறது. ஓர் சிறந்த ஸ்னைப்பர் வீரன், பல எதிரொலிகள் ஏற்படக் கூடிய பிரதேசத்தையே தனது குறியை சுடுவதற்காய் தேர்ந்தெடுப்பான். இதனால் எங்கிருந்து சத்தம் வந்தது என்பதனை அறிவது கடினமானது.



*மேலிருந்து, ஸ்டர்லிங் மில்லி மீற்றர் 9. சப் மெஷின் துப்பாக்கி ஸ்டர்லிங் ரீ - 56 இலகு இயந்திர துப்பாக்கி மற்றும் ஏ.கே. 47 துப்பாக்கியொன்று*



*மேலிருந்து இடமிருந்து வலத்திற்கு : அப்பாற் போடக் கூடிய மில்லி மீற்றர் 56 தாங்கிகளை அழிக்கும் ராக்கட் லோன்ஜர். கோல்ட் 45 பிஸ்டல் மி.மீ. 9 ரக சிக் பிஸ்டல். மச் 10 இன்க்ரம் மி.மீற்றர் 9 ரக சப் இயந்திர துப்பாக்கி, எஸ்.ஆர். 6 ரக முகமூடி மற்றும் கிலோகிராம் 5 ரக யூகோஸ்லாவிய தாங்கியழிப்பு குண்டு.*

**இலக்கொன்றை தவறாக அடையாளங் காணப்படுவதாக இருக்காதீர்கள்**

- 😐 உங்கள் உடைகள் இராணுவ உடைகளைப் போலல்லாமல் இருப்பதற்கு கவனஞ் செலுத்தவும். கொமாப்லாஜ் உடைகளை அணிய வேண்டாம்.
- 😐 புகைப்படக்கருவி துப்பாக்கியொன்றாகத் தெரிவதற்கு இடமுண்டு என்பதனை நினைவில் வைத்துக் கொள்ளவும்.
- 😐 உடனடியாக வெளிச்சம் ஏற்படுவது போல் புகைப்படம் எடுத்தல். ஆயுதமொன்றின் உடனடி வெளிச்சமாகக் கருதுவதற்கு இடமுண்டு. கமரா கண்ணாடியொன்றும், கண்ணாடிகளின் வெளிச்சங்களும், மின்னும் கைக் கடிகாரங்கள் (அவற்றை மறுபக்கத்திற்கு திருப்பவும்) அவை சூரிய ஒளி பட்டவுடன் மினுங்கக் கூடும்.
- 😐 கமராவின் வெளிச்சம், விசேடமாக இரவு நேரங்களில் கவனம் செலுத்தப்படும்.
- 😐 பற்ற வைக்கும் சிகரெட் அதிகளவு தூரத்திலிருந்து காணக்கூடியதுடன் அவை மறைந்திருந்து வெடி வைப்பவர்களை ஈர்த்துக் கொள்வதற்கு இடமுண்டு.

பற்றி நீங்கள் வானிலிருந்த படம்பிடித்துக் கொள்ள உதவக் கூடியவர்கள்.

பாதுகாப்பில்லாமல் தனியாக நீங்கள் யுத்தகளத்தில் பயணித்தால் நீங்கள் எங்கே நிற்கிறீர்கள் என்பது பற்றியும் படையினரின் நிலைகள் பற்றிய உணர்வும் உங்களுக்கிருக்க வேண்டும். பரிச்சயமான ஒருவருடன் நடமாடுங்கள். நீங்கள் துப்பாக்கிக்கு இலக்காக மாட்டீர்கள் என்று தெரிந்த பின்பே நீங்கள் ஊடகவியலாளர் என்பதை அறியத்தாருங்கள். உங்கள் வாகனத்தில் ஊடகம். பத்திரிகையாளர் என்று எழுதி ஒட்டுங்கள் அது சாதகமாய் அமையும் என்று தெரிந்தால். கேள்வி கேட்கப்பட்டால் நீங்கள் ஊடகவியலாளர் என்று உங்களை இனங்காட்டுங்கள். மோதும் படைகளை அவர்களின் சீருடை, அவர்கள் பாவிக்கும் ஆயுதம், வாகனம் என்பவற்றை வைத்தே உங்களால் இனங்காண முடியும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சில சந்தர்ப்பங்களில் இது எளிதல்ல. சில படைகளுக்கு இனம் காட்டும் அடையாளத்துவங்கள் கிடையாது. சில போராட்டங்களில் இறந்த எதிரிகளின் உடைகள் ஆயுதங்கள் என்பவற்றையே படையினர் பாவனைக்கு எடுத்துக் கொள்வதும் உண்டு. அனுமதி இல்லாமல் படையினரையோ யுத்தம் நடக்கும் பகுதிகளையோ நீங்கள் படம்பிடித்தால் அவர்கள் உங்கள் படப்பிடிப்புக் கருவியைப் பறித்துக் கொள்ளக் கூடும். நீங்கள் கைது செய்யப்படலாம் அல்லது நிலைமை அதைவிட மோசமாகவும் அமையலாம்.

## இலக்காகுதல்

பின்வரும் 3 காரணிகளில் ஒன்றுக்காக நீங்கள் ஓர் பலி இலக்காக மாறலாம்.

- 😐 பிழையான நேரத்தில் பிழையான இடத்தில் நீங்கள் இருந்தால் (இது துரதிஷ்டம்)
- 😐 நீங்கள் தமக்கு ஆபத்து என்று படையினரால் தவறாக கணிக்கப்பட்டால்
- 😐 நீங்கள் ஓர் ஊடகவியலாளர் என்பதால்

நீங்கள் படையினரில் ஒருவர் போல் காட்சி தராமல் இருந்தால் ஆபத்தைத் தவிர்க்கக் முடியும். இராணுவ ஆடையின்றி கவர்ச்சியான நிற ஆடைகளை அணியுங்கள். மேலாடை ஒரு நிறத்திலும் கீழாடை இன்னொரு நிறத்திலும் இருக்க வேண்டும். படம்பிடிக்கும் போது கவனமாயிருங்கள். ஏனென்றால் படப்பிடிப்புக் கருவி ஓர் ஆயுதம் என்று தவறாக எடை போடப்படலாம். சில வேளைகளில் கமராவும் Sam 7 குண்டு வீச்சுக் கருவியும் ஒன்று போல் தோற்றமளிக்கலாம். உங்கள் படப்பிடிப்புக் கண்ணாடியில் சூரிய ஒளி பட்டுத் தெறிக்கும் போது அது ஓர் ஆயுதம் என்று எண்ணப்படலாம். நீங்கள் ஓர் கேந்திர ஸ்தானத்தின் அருகாமையில் நிற்பதால் நீங்கள் இலக்காகலாம். இதனால் நீங்கள் குண்டுத் தாக்குதலுக்கும் விமானத் தாக்குதலுக்கும் இலக்காகலாம்.

## ஆயுதங்கள் பற்றிய அறிவு

யுத்தங்களை அறிக்கையிடும் செய்தியாளர்களுக்கு பல்வேறு ஆயுதங்கள் பற்றிய அறிவு அவசியம். அந்த ஆயுதங்களின் சக்தி பாவனைத் தூரம் என்பன பற்றிய அறிவு வேண்டும். இது உங்கள் உயிரைக் காப்பற்றவோ அழிக்கவோ முடியும். சிறிய ஆயுதங்களின் பாவனையானது அதன் வகை அல்லது உற்பத்தியாளர், காலநிலை மற்றும் அதனை பாவிப்பவரின் திறன் (சிந்தனை, களைப்பு ஆகியன) என்பவற்றில் அடங்கும். 1,000 மீற்றர் தூரத்தில் மணிக்கு 16 கி/மீ வேகத்தில் வரும் தோட்டாவினையும், காற்று அதன் குறியிலிருந்து நான்கு மீற்றர் திசை திரும்பும்.

குறைந்த வலுவுடைய ஆயுதங்கள் கை துப்பாக்கி அல்லது ரைய்பல் ஆகியன ஒலியின் வேகத்தை விட குறைந்த வேகத்திலே குண்டை வெடிக்க வைக்கும், உடல் ரீதியான பாதுகாப்பு கவசங்கள் இவற்றிலிருந்து பாதுகாப்பை பெற்றுத் தரும். தாணியக்க மற்றும் தன்னியக்க ஆயுதம் நேராகவும், உயர்வாகவும் இயங்க வல்லதோடு இவற்றை கொண்டு ஒழுங்காக பயிற்றுவிக்கப்பட்ட வீரனுக்கு 20 மீற்றர் தூரத்திற்கு குறிவைக்கக் கூடியவனாக இருக்கிறான். அதே வேளை பயிற்சியில் குறைவுடைய வீரன் தூரத்தை ஒழுங்காகக் குறி வைப்பதில்லை. ஆபத்தென தெரியும் நிலைமையில் விலகிக் கொள்வதற்கு தீர்மானித்துக் கொள்வதற்கு இத்தகவல்கள் உங்களுக்கு உதவும்.

இத்தகவல்கள் எதிர்ப்பை உணர்ந்து, அறிந்து, அதிலிருந்து விடுபட உதவும். கனரக ஆயுதங்களின் இயக்கமானது ஒலியின் வேகத்தை விடக் கூடிய வேகத்தில் இயக்கம் பெறும் (ரைபல், அல்லது இயந்திர துப்பாக்கிகள்) நீங்கள் தோட்டாவின் ஒலியைக் கேட்டால் அது உங்களை தவறவிட்டதொன்றாக இருக்கும். அதனது ஒலி மிக நுண்ணியமாயின், துருப்புக்கள் அருகில் இருக்கிறார்கள் என அர்த்தப்படும்.

அதிக வேகத்தினையுடைய ஆயுதங்கள் (ரைபல் அல்லது இயந்திர துப்பாக்கி) ஒலியின் வேகத்தை விடக் குண்டுகளை வெடிக்க வைக்கும். உங்களுக்குத் தோட்டாவின் ஒலி கேட்குமாயின் அத்தோட்டா அப்பொழுது உங்களை கடந்து சென்றிருக்கும். தெளிவான வெடிச் சத்தமொன்று கேட்குமாயின் அது அருகிலிருந்து வெடி வைக்கப்பட்டுள்ளது.

## பாதுகாப்புக்கு மத்தியில் ஒன்றாய் செல்லும் வாகனக் குழுக்கள்

பாதுகாப்புக் குழுக்கள் எமக்கு தவறானதொரு பாதுகாப்பின் உணர்வினைத் தரவல்லன. இராணுவப் பாதுகாப்புக் குழுக்களுக்கு பல சட்டதிட்டங்கள் காணப்படுகின்றன. தாக்குதல்கள் ஏற்படும் போது உடனடியாக அறிந்துகொள்ள, அப்பாதுகாப்புக் குழுக்களின் வாகனங்கள் தொடர்பாடல் உபகரணங்களையும், ஆயுதங்களையும் வைத்துள்ளன. மாறாக ஊடகவியலாளரின் வாகனங்கள் நேர்வரிசையில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கையை மட்டும் பாதுகாப்பிற்காக நம்பி இருப்பவை. நீங்கள் இராணுவ அல்லது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவுடன் பயணிப்பதாய் இருந்தால், அவற்றின் சட்டங்களைப் பின்பற்றுங்கள். இராணுவ பாதுகாப்புடன் இல்லாத போது, எதிரிகளின் கவனத்தை ஈர்க்காத வண்ணம் கவனமாய் இருங்கள். உங்களுடைய வழிகாட்டி வரைபடத்தை வைத்துக் கொள்ளுங்கள். எங்கு இருக்கிறீர்கள், எங்கு போகிறீர்கள் என்பதனை நன்கு அறிந்து கொள்ளுங்கள். பார்த்துக் கொள்ளக் கூடியளவு தூரத்தில் இருங்கள். கார்களுக்கிடையில் ரேடியோ அல்லது தொலைபேசி தொடர்பினை வைத்துக் கொள்ளுங்கள். இராணுவ பாதுகாப்புக் குழுக்கள் அனேமாக வாகனங்களின் முன்னாலோ, பின்னாலோ செல்ல விரும்புவதில்லை. தாக்குதலின் போது முன், பின் செல்லும் வாகனங்களைத் தாங்கி இரு முனைகளையும் மறித்துத் தாக்குவதே இதற்கான காரணமாகும்.

## *சோதனைச் சாவடிகள்*

சோதனைச் சாவடிகளை கடந்து செல்லல் என்பது பீதியை, அபாயத்தை ஏற்படுத்தக் கூடிய தருவாயாகும். அவற்றில் விழுமிய ஒழுக்கமற்ற, போராளிகள், கரில்லாக்கள் அல்லது சாதாரணப் படையினர் காணப்படலாம். உங்கள் நோக்கம் இதனைக் கடந்து போவதே. எப்போதும் புன்னகைத்த முகத்துடன் இருங்கள். மோதல்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

சாவடியை நெருங்கும் போது, தேவையான பத்திரங்களைத் தவிர வேறெதையும் கையில் வைத்திருக்க வேண்டாம். உங்களை ஓர் ஊடகவியலாளராக அறிமுகம் செய்யுங்கள். எவ்வித சிக்கலுமின்றி சோதனைச் சாவடியை நீங்கள் கடந்தீர்களானால் எப்போதும் புன்னகைத்த முகத்துடன் இருங்கள், உங்களிடம் கேட்கப்பட்டதைத் தவிர வேறெந்த தகவல்களையும் அளிக்காதீர்கள், தேவையற்ற விடயங்களில் தலையிடாதீர்கள். அனுமதியின்றி ஒரு போதும் படம் பிடிக்காதீர்கள்.

பிரச்சினை ஏதும் ஏற்பட்டு, சிப்பாய்கள் உங்களிடம் ஆவேசத்தோடு அல்லது அவமரியாதையாக நடந்து கொண்டால், முதலில் அவர்களை அமைதிப்படுத்துங்கள். ஒரு சிகரட்டை அல்லது இனிப்புப் பண்டத்தைக் கொடுங்கள். சிப்பாயினதும், உங்களதும் மொழி ஒரே மொழியாகவிருந்தால், நீங்கள் மோதலைத் தவிர்த்து விளையாட்டினைப் பற்றி அல்லது அவரது

குடும்பத்தினைப் பற்றி கதைக்கலாம். உங்கள் பெயரை அவருக்குத் கூறுங்கள். நீங்கள் எங்கிருக்கிறீர்கள், மற்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதனை நீங்கள் நன்கு அறிவீர்கள் என்பதனை அவருக்குத் தெரியப்படுத்துங்கள்.

ஒழுங்காக பயிற்றுவிக்கப்படாத இராணுவத்தினரிடம் அல்லது போராளிகளிடம் உங்களுக்கான ஆபத்து அதிகமாய் இருக்கலாம். அவர்கள் உங்கள் முகத்தை பார்க்காமல் பேசினால், உணர்ச்சிகளற்று காணப்படும் போது சற்று கவனமாய் இருங்கள். அவர்களுக்கு மனித உயிரின் பெறுமதி இனிமேலும் முக்கியமற்றதாய் இருக்கலாம். ஒரு சிப்பாயின் மாணவர்களால் சீடர்கள் அளவில் மிகச் சிறியவர்களாய் இருந்தால் உஷாராகவிருங்கள். அவர் போதைவஸ்து அருந்தி இருக்கலாம், போதைவஸ்து வளர்ச்சியைக் குறைக்கும். நீங்கள் உங்கள் அடையாளத்தை காட்டும் போது, உங்கள் கணவரின் அல்லது மனைவியின் அல்லது பிள்ளைகளின் புகைப்படத்தை காண்பியுங்கள். இது நீங்கள் எங்கு போய் இருக்கின்றீர்கள், உங்கள் வரவை எதிர்பார்த்த வண்ணம் சிலர் இருக்கின்றார்கள் என்பதனை எடுத்துக் காட்டும். இதன் மூலம் நீங்கள் உங்களுக்கு உரிமை இருக்கின்றது என்பதனையும், நீங்கள் துன்புறுத்தப்பட்டால், அதற்கான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்பதனையும் அவர்களுக்கு நீங்கள் எதுவித அபாயத்தையும் கொண்டுவரவில்லை என்பதையும் விளக்குகிறீர்கள். எப்போதும் புன்னகைத்த வண்ணம் இருங்கள்.

## யுத்தக் களத்தில் பொது அறிவுடன் நடந்து கொள்ளல்

சண்டைப் பிடிப்பவர்கள் எங்கிருக்கின்றார்கள் என்று நீங்கள் அறிவீர்களா? எங்கிருந்து துப்பாக்கித் தாக்குதல் வரக் கூடும்? உங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டு ஓர் அவசரத்தின் போது எவ்வாறு தப்பிப்பது என்பதனைச் சிந்தியுங்கள்.

அதி கூடிய தன்னம்பிக்கையுடன் இருக்காதீர்கள். உங்கள் வரையறைகளை அறிந்திருங்கள். உங்கள் தீர்மானங்களுக்கு நீங்களே பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள். ஏனைய ஊடகவியலாளர்களின் முடிவுகளினால், உயிராபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

நினைவுப் பொருட்களை சேகரிக்க வேண்டாம். நிலவெடிகள் மிக கவர்ச்சிகரமாக தோற்றமளிக்கும்.

ஒரு போதும் ஆயுதத்தினையோ, துப்பாக்கியினையோ கொண்டு செல்லாதீர்கள். அதன் பிற்பாடு நீங்கள் சிவிலியனாக கருதப்பட மாட்டீர்கள்.

உங்களை சுத்தமாக வைத்து, உங்கள் எண்ணங்களை மெருகூட்டிக் கொள்ளுங்கள். உங்கள் உடல் நிலையைப் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் உயிர்த்தப்புவதற்காக ஓட வேண்டியிருக்கும் ஞாபகமிருக்கட்டும்.

குண்டுத்தாக்குதல்களை அண்மையிலிருந்து அவதானிக்கும் போது, அவற்றில் கோளாறு ஏற்பட்டு நீங்கள் காயப்படக் கூடும், இதைக் குறித்தும் அவதானமாய் இருத்தல் வேண்டும்.

**வாகனத் தொடர்**

2001 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் நான்கு ஊடகவியலாளர்கள் (ஆப்கான், அவுஸ்திரேலியா, ஸ்பானியா மற்றும் இத்தாலி) கொண்டு சென்ற மோட்டார் ஊர்தி நிறுத்தப்பட்டு அந் நான்கு ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் பயணஞ் செய்த வாகனங்கள் ஒவ்வொன்றும் தூரத்திலிருந்ததினால் ஒன்றும் செய்து கொள்ள முடியாது போனது.

## மோதலின் பிற்பாடு

நீங்கள் மோதல் நடந்த இடத்தை பார்வையிடச் சென்றால், அங்கு நில வெடிகளும், ஷெல்களும், கட்டிடம் பாதுகாப்பற்றும் காணப்படலாம்.

வெற்றியின் களிப்பில் போராளிகள் பல சமயங்களில் வானத்தை நோக்கிச் சுடுவதுண்டு. சுடப்படுகின்ற தோட்டாக்கள் மணிக்கு 190 கி/மி (120 மைல்) வேகத்தில் நிலத்தில் வந்து விழுந்து வெடிக்கும் இவ்வாறு பலர் இறந்தும், காயப்பட்டுமுள்ளனர்.

## ஊடகவியலாளர்கள் என்ற வகையில் குறி வைக்கப்படுதல்

ஓர் ஊடகவியலாளரின் பிரசன்னம், அல்லது விசேடமாக ஒரு 'கமரா'வின் பிரசன்னம் சம்பவங்களையும் மற்றும் போராளிகளையும் பாதிக்கும். எதிர்ப்புச் சம்வங்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். இராணுவத்தினால் செய்யப்பட்ட கொலைச் சம்பவத்தை நீங்கள் கண்டால், அமைதியாகவும், பதற்றமில்லாமலும், 'கமராவை' ஒழித்து வைத்துக் கொள்ளுங்கள். இராணுவத்தினர் யுத்தக் கொலைகளினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதனை அறிந்துள்ளனர். எனவே அவர்கள் உங்களிடமிருந்து அனைத்து அத்தாட்சிகளையும் அபகரிக்க அல்லது அழிக்க முனைவர். இதனைக் குறித்து அவதானத்துடன் இருக்கவும். நீங்கள் எதனையும் காணாதவர் போல் அவ்விடத்திலிருந்து விலகிச் செல்லுங்கள்.

**படைவீரரின் பார்வையில் உங்களைப் பார்க்கவும்**

"ஏனையவர்கள் இருக்குமிடத்திலிருந்து உங்களை நோக்கி பார்க்கவும். படைவீரர் சரியாக பயிற்சி பெறாத 17, 18 வயதைக் கொண்ட பயந்த இளைஞரொருவராக இருக்க முடியும். ஆபத்தான சூழலில் ஒருவர் செய்யும் விடயம் தர்க்கரீதியாக இருக்கக் கூடும்".

# சிவில் கலவரங்களும் உள்நாட்டு அமைதியின்மையும்

உங்கள் பிரதேசத்தின் நகர மத்தியில் இடம்பெறும் கலவரங்கள், உள்நாட்டு அமைதியின்மை மற்றும் எதிர்ப்புக் கூட்டங்கள் கூட, யுத்தப் பிரதேசத்தைப் போன்று அபயகரமானதாகக் காணப்படலாம்.

சில சம்பவங்கள் ஊகிக்க முடியாதவை, அவற்றில் அடங்கி இருக்கும் அபாயங்கள் மிகப்பயங்கரமான நிலைக்கு, மிக வேகமாக அதிகாரிக்கலாம். வன்முறையற்ற கூட்டங்களும் பயம், கோபம் ஏற்படும் போது அபாயம் விளைவிப்பதாக மாறலாம். அமைதியான எதிர்ப்புக் கூட்டங்கள் திடீர் என பயங்கர கலவரங்களாக தோற்றமெடுக்கலாம். இனக் கலவரம் அல்லது சமூகங்களுக்கிடையில் பிளவு காணப்படும் போது, ஊடகவியலாளர்கள் பாதுகாப்பான அல்லது பாதுகாப்பற்ற இடங்கள் மற்றும் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற நடத்தைகள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும். பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டங்கள் பொது மக்களையும், சில நாடுகளில் ஊடகவியலாளர்களையும் குறி வைக்கின்றன. படப்பிடிப்பாளர்கள், செய்தியாளர்கள் ஆகியோர் பயங்கரவாதிகளிடமிருந்து வரக்கூடிய பழிவாங்கல் நடத்தைகளைக் குறித்தும் அறிந்திருத்தல் வேண்டும்.

இங்கும் யுத்த பிரதேசங்களில் போன்றே குறைந்த அபாயத்திலும், கூடியளவு நல்ல செய்திகளைப் பெறுவதே ஊடகவியலாளர்களின் நோக்கமாகும். எனவே முன்கூட்டியே திட்டமிட்டு, கட்டுப்பாட்டினுள் சகலதையும் வைத்துக் கொள்ள வேண்டும். இதில் அதி கூடிய அபாயம் செய்தி குழுக்களுக்கே காணப்படுகின்றன. அவர்கள் தமக்கு பழக்கப்படாத, பாதுகாப்பு சம்பந்தமான எதுவித முன் அறிவித்தலுமின்றி, தாமே குறிவைக்கப்படக் கூடியவர்களாக மாறுகின்ற சூழ்நிலைக்குள் செல்லும் போது அது அபாயகரமானதாக மாறுகின்றது. மோதலில் ஏதாவது பக்கத்துக்குச் சார்பானவர்கள் என கலகக்காரர்கள் ஊடவியலாளர்களைக் குறித்து அறிந்து வைத்திருந்தால் அது அவர்களுக்கு மேலதிக ஆபத்தினைத் தரவல்லது. தம்மை ஓர் ஊடகத்தோடு சம்பந்தப்பட்ட ஸ்டிக்கர்களை அணிந்திருப்பின் அவற்றைக் கழற்றி விடுங்கள்.

பாதுகாப்பு மற்றும் பொலிஸ் படைகள் கமராக்கள் அல்லது வீடியோ கமராக்கள் காணப்படும் போது அவை கலவரத்தை உருவாக்கக் காரணமாக இருக்கும் எனவும் அவற்றை உபயோகிக்க வேண்டாம் எனவும் கூறக் கூடும். கலகக்காரர்களினால், அல்லது பொலிசாரால் ஊடகவியலாளர்களின் கமராக்களே கலவரத்தை உருவாக்கக் காரணமாய் இருந்தது என எண்ணினால், ஊடகவியலாளரைத் தாக்கக் கூடும். படம் பிடிக்கப்படும் காட்சிகள்

**பயிற்சி, அழுத்தங்களின் கீழ் குழப்பமடையாது இருப்பதற்கு ஸ்னேசானாவுக்கு உதவி புரிய முடியும்.**

ஸ்னேசானா லுபேவ்ஸ்தா சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் மற்றும் மசிடோனியா பத்திரிகை நிலையத்தின் மூலம் 2000 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிறுவப்பட்ட மசிடோனியாவின் முதலாவது பாதுகாப்பு பயிற்சி பாடநெறிகளில் கலந்து கொண்டனர். ஐந்து மாதத்தின் பின்னர் A1 தொலைக்காட்சிக் குழுவுடன் கொசோவா எல்லையில் அமைந்துள்ள கனுசெவ்கி என்ற மசிடோனியா கிராமத்திற்கு சென்றனர். ஸ்னேசானா மற்றும் அவரது குழுவினர் அல்பேனியா மக்கள் இராணுவம் மூலம் தடுக்கப்பட்டு கேள்விகள் கேட்கப்பட்டன. அவ் இராணுவத்தில் சிலர் கொசோவா புரட்சி இராணுவத்தின் இலட்சினைகளை அணிந்திருந்தனர். ஸ்னேசானா இவ்வாறு தெரிவித்தார். "அவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்தனர். வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி எம்மை சுற்றி வளைத்தனர். என்னைப் போல் எனது குழுவுக்கும் மிகவும் நடைமுறை அனுபவமாக அமைந்தமை, நாம் அமைதியாக இருந்தமையும், நட்புறவுத் தன்மையினை காட்டுவதற்கும் மற்றும் கொசோவா புரட்சி இராணுவ உறுப்பினர்களுடன் கதைப்பதற்கு முயற்சி செய்தமையாகும். அதிஷ்டவசமாக அவர்கள் எமக்கு பாதிப்பினை ஏற்படுத்தவில்லை." "பாதுகாப்பு பயிற்சி பாடநெறி எனக்கு பெரிதும் உதவியது. துரதிஷ்டவசமாக நான் கற்ற அனைத்தையும் எனது நாட்டிலே நடைமுறைப்படுத்தினேன்.

**உயிரை பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகள்**

- ஊடக அடையாள அட்டையை எடுத்துச் செல்லவும். ஆனாலும் பாதுகாப்பான சந்தர்ப்பத்தில் மட்டும் அதனைக் காண்பியுங்கள்.
- உங்களுடைய கையடக்க தொலைபேசியை, அவசர இலக்கங்களை உடனடியாக அழைக்கக் கூடிய விதத்தில் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும்.
- கண்ணீர் புகை வரும் திசைக்கு எதிர் திசையில் இருக்கவும்.
- ஈரமான துவாய் ஒன்று, நீர் மற்றும் சில எலுமிச்சை வகையைச் சார்ந்த காய்களை எடுத்துச் செல்லவும்.
- பாதுகாப்புக் கண்ணாடி அணிவது தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
- ஆயுதங்களை உபயோகிப்பதற்கான இடம் இருந்தால் பாதுகாப்பு உடைகள் அணிவது தொடர்பாகக் கவனம் செலுத்தவும்.
- முதலுதவிப் பொருட்களை எடுத்துச் செல்லவும். அவற்றினை உபயோகிக்கும் முறை பற்றி கற்றுக் கொள்ளவும்.
- இயற்கையான பட்டுத் துணிகளால் தைக்கப்பட்ட இலகுவான ஆடைகளை அணியவும்.
- தோள், கால்கள் மற்றும் கழுத்தை மறைத்துக் கொள்ளவும்.
- நாளொன்றிற்குத் தேவையான உணவு மற்றும் நீரை எடுத்துச் செல்லவும்.

பொலிசாரிடம் கையளிக்கப்படும் என கலகக்காரர்கள் எண்ணினால், படப்பிடிப்பாளர்கள் ஆபத்தினை எதிர் நோக்கலாம்.

தம்மை அடையாளம் காட்டிக் கொள்ள விரும்பாத, தாம் படம் பிடிக்கப்படுவதை விரும்பாத கலகக்காரர்கள் தலையில் முகத்தை மறைக்கும் உறைகளை அல்லது தலைக் கவசங்களை அணிந்து கொள்ளலாம். பொலிசாரும் கூட கலவரத்தின் போது தலைக் கவசமணிந்து, முக உறைகள் அணிந்து, தமது அடையாள இலக்கங்களைக் கூட கழற்றி வைத்திருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் தாம் அடையாளம் காணப்பட முடியாததன் காரணத்தால் அதிகளவு வன்முறைகளை பிரயோகிப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

கூட்டத்தினுள் காணப்படும் கோபத்தின் காரணத்தால் வன்முறை எழலாம். அல்லது பொலிசார் பலாத்காரமாகக் கூட்டத்தை கலைக்க முயலும் போது எழலாம். இரு தரப்புமே எச்சரிக்கை வழங்குவது குறைவு. பாதுகாப்புப் படையினர் அதி வேகத்துடன் தடிகளினால், கவசங்களினால், கண்ணீர் புகையினால், ரப்பர் தோட்டாக்களினால் அல்லது உண்மையான தோட்டாக்களினால் தாக்கப்படலாம். நீங்கள் சனக் கூட்டத்தினுள் அகப்பட்டுக் கொண்டால் அதிலிருந்து வெளியில் உள்ள உங்கள் நண்பர்களையும், பாதுகாப்பான இடத்தையும் சென்றடைவது கடினம்.

## முன் கூட்டியே திட்டமிடல்

ஓர் எதிர்ப்புக் கூட்டத்தினைக் குறித்து திட்டமிடும் போது, கூட்டத்தின் செயற்பாட்டினைக் குறித்தும், பாதுகாப்பு வழிகளைக் குறித்தும் அறிந்து வைத்துக் கொள்ளுங்கள். அவ்விடத்திற்கு முன் கூட்டியே சென்று தப்பிச் செல்லக் கூடிய வழிகளை நோட்டமிடுங்கள் ஓர் இனத்தைச் சார்ந்த அல்லது மதத்தைச் சார்ந்தவர்கள் எங்கு வாழ்கிறார்கள் என்பதனை அறிந்து வைத்திருத்தல், நீங்கள் தப்பிப்பதற்கு உதவியாய் இருக்கும்.

- உங்களது குழு பிரிந்து சென்றால், சந்திப்பு ஸ்தலங்களையும், நேரத்தையும் கூடுமானால் நேரடித் தொடர்பும் கொண்டிருங்கள்.
- ஊடக அடையாள அட்டையினை வைத்திருங்கள். இது தேவையற்ற பிரச்சினையை உருவாக்கும் என நீங்கள் எண்ணினால் மாத்திரம் அதை மறைத்து வையுங்கள்.
- ஓர் கையடக்கத் தொலைபேசியை உங்கள் வசம் வைத்திருங்கள். அதை இலகுவாக அழைப்பை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் தயார்ப்படுத்துங்கள்.
- கண்ணீர்ப் புகையின் அபாயம் காணப்பட்டால், ஓர் நனைந்த துணியையும், தண்ணீரையும் வைத்துக் கொள்ளுங்கள். முகவுரை ஒன்றினை உங்களால் கொண்டு செல்ல முடியாவிட்டால், பாதிக்கப்பட்ட இடத்தில் அரிப்புத்

தன்மையினை குறைக்க தேசிக்காய் அல்லது தோடம்பழச் சாரினைப் புழியலாம்.

- உங்கள் மீது நெருப்புப் பிடித்துக் கொண்டால் அதனை அணைப்பதற்கு ஏதாவது நீங்கள் கொண்டு செல்ல வேண்டும்.
- கண்ணீர்ப் புகை பாவிக்கப்படும் இடங்களில் கண்களைப் பாதுகாக்க வேண்டும். நீச்சல் கண்ணாடிகள் அல்லது தொழிற்சாலை கண்ணாடிகள் இதற்குப் பொருந்தும்.
- துவக்கு போன்ற ஆயுதங்கள் பாவிக்கப்பட்டால், யுத்தச் சூழ்நிலையில் பாவித்த ஆடைகளை அணியுங்கள்.
- முதல் உதவிப் பொருட்களை எடுத்துச் செல்லுங்கள். அக் கருவிகளை எவ்வாறு பாவிப்பதென்று அறிந்து கொள்ளுங்கள்.
- காற்றோட்டமான, இலகுவில் தீப்பற்றிக் கொள்ளாத ஆடைகளை அணியுங்கள். கை, கால் மற்றும் கழுத்தை மறைக்கும் ஆடைகளை அணியுங்கள். இவை உங்கள் உடம்பில் கண்ணீர் புகை ஏற்படுத்தும். அரிப்பினைக் குறைக்க உவுதவும்.
- ஒரு நாளுக்குரிய உணவு, குடிநீர் என்பவற்றைக் கொண்டு செல்லுங்கள்.

## ஸ்தலப்படுத்தல்

கமராக்களையும், செய்தியாளர்களையும் எவ்வாறு முழு சம்பவத்தையும் பார்க்கக் கூடிய இடத்தில் ஸ்தலப்படுத்துவது என்பதனை திட்டமிடுங்கள். அவ்விடத்திலிருந்து வெளியேற பல வாயில்கள் காணப்பட வேண்டும். படம் பிடிப்பதாகவிருந்தால் நீங்கள் கூட்டத்தினுள் சென்று படம்பிடிப்பது சாத்தியப்படாது. செய்தியாளராகவிருந்தால் நீங்கள் இருக்கும் இடத்தில் சம்பவம் தெளிவாகத் தென்பட்டு, சப்தமும் தெளிவாகக் கேட்டால் நீங்கள் கூட்டத்தினுள் செல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் அங்கத்தினருடன் சம்பவத்தின் முன் அல்லது பின் நேர்காணலை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் முழுச் சம்பவத்தினதும் படம் தற்போது உங்களுக்குத் தேவைப்படலாம்.

## சம்பவத்தின் போது

நீங்கள் ஒரு குழுவின் அங்கத்தவர் என்றால், அக்குழுவுடன் சேர்ந்து ஒத்துழையுங்கள். ஒன்றாக இருங்கள் அல்லது நன்றாக விலகிச் செல்லுங்கள். இயன்றளவு நேரத்தோடு பின்வாங்குங்கள். பின்வாங்குதலை காலதாமதம் செய்யக் கூடாது. நீங்கள் தனிநபராக வேலை செய்தால், யாருடனாவது தொடர்பினை வைத்திருங்கள். உங்கள் கையடக்கத் தொலைபேசியை

**மோதல் பிரதேசம் ஒன்றில்**

- தேவைக்கு அதிகமாக தன்னம்பிக்கையை வைத்துக் கொள்ளாதீர்கள்
- உங்களுடைய வரையறைக்கு மதிப்பளிக்கவும்.
- உங்களுடைய தீர்மானங்களின் பொறுப்புக்களை எடுத்துக் கொள்ளவும்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆயுதம் ஒன்றினை எடுத்துச் செல்லாதீர்கள்.
- சுத்தமாக இருக்கவும்.
- உங்களது எண்ணங்களை உயர்வாக வைத்துக் கொள்ளவும்.
- செல் வெடிகள் வெடிக்கும் இடங்களுக்கு அளவுக்கு அதிகமாக நெருங்காதீர்கள்.
- பிறர் செய்யும் விடயங்களுக்கு அவதானம் செலுத்தவும்.
- மோதல் ஞாபகச் சின்னங்களை பொறுக்கி எடுக்காதீர்கள். அவை வெடிப்பதற்கு இடம் உண்டு.
- மேலே செல்வது கீழே வரக் கூடியது.
- மகிழ்ச்சிக்காக மேலே வைக்கும் வெடிகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கவும்.

அதற்காகத் தயாா்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

வெளியேறும் வாயில்கள், முக்கிய இடங்கள், பாதுகாப்புப் படை இடங்கள், மற்றும் அண்மையிலிருக்கும் வைத்தியசாலை என்பவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.


படம் பிடிப்பவை அபகரிக்கப்படும் என எண்ணினால், நீங்கள் படம் பிடித்த உடனேயே அவற்றை மறைத்து விடுங்கள். நீங்கள் "டிஜிடல்" உபகரணங்கள் பாவிப்பதாய் இருந்தால், போலி வட்டொன்றினை வைத்திருந்து, உங்களை யாரும் கையளிக்குமாறு கேட்டால் அதனைக் கொடுங்கள். ஆபத்து அதிகமான சம்பவங்களில், இன்னுமொரு படப்பிடிப்பாளருடன் இணைந்து கொள்ளுங்கள், இது நீங்கள் ஒருவரை ஒருவா் அவதானித்துக் கொள்ள உதவும். நீங்கள் போட்டிக்காரராக இருக்கலாம். ஆனாலும் நீங்கள் தொழில் சிநேகிதா்கள்.

தனி படப்பிடிப்பாளராக அல்லது செய்தியாளராகக் கடமையாற்றினால், நீங்கள் எப்போது கூட்டத்தினால் அவதானிக்கப்படுகிறீா்கள் என்பதனை அறிந்திருங்கள். கூட்டம் எதிா்ப்புத் தெரிவிக்காத போது கூட நீங்கள் ஆபத்திலிருக்கலாம். வேறொருவரும் ஏற்கனவே நாட்டில் படத்தினை எடுப்பதற்காய் தேவையற்ற காரியங்களில் ஈடுபடாதீா்கள்.

## சம்பவத்தின் பிற்பாடு

செய்தி அறையில் உங்கள் அனுபவத்தை பகிா்ந்து கொள்ளுங்கள். இது மறுமுறைக்கு உதவும்.

உங்கள் செய்தியின் உண்மைத் தன்மையினை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாட்டில் பாதுகாப்புப் படையினா் படத்தினை அல்லது வீடியோ படத்தினைக் கோருவது சம்பந்தமான சட்டம் யாது? நீங்கள் வேலை செய்யும் நாட்டின் பிரதேசத்தின் சட்டங்களைக் குறித்து அறிந்திருத்தல் வேண்டும். உங்கள் செய்தி நிறுவனத்தின் கொள்கை யாது? நாட்டினுள் செய்தியினைப் பாதுகாக்க முடியுமா? அல்லது நாட்டிற்கு வெளியே இருக்கும் ஏதாவது முறைமையினால் செய்தியினை பாதுகாக்க முடியுமா? கலவரங்களின் அல்லது எதிா்ப்புக் கூட்டங்களின் பிற்பாடு பொலிசாா் உங்கள் செய்திகளை ஆராய்வதற்கு இடமளிக்கப்பட்டால், அது பல ஆபத்துக்களை விளைவிக்கலாம். கலவரத்தில் ஈடுபடுபவா்கள் உங்களை அத்தாட்சி சேகரிக்கும் ஒருவராக நோக்கினால் அது உங்களுக்கு ஆபத்து.



*இராணுவ அதிகாரிகள்* மூலம் புகைப்பட ஊடகவியலாளரின் புகைப்படக் கருவியிலிருந்து புகைப்படச் சுருளை வெளியில் இழுத்துப் போட்டதன் பின்னர்.

***படப்பிடிப்பு : அனுருத்த லொக்குஹப்புஆராச்சி***

## பயங்கரவாத தாக்குதல்கள்

ஊடகவியலாளர்களும் பொது மக்களைப் போன்றே பயங்கரவாதத் தாக்குதலின் போது ஆபத்தினை எதிர்நோக்குகின்றனர். இதற்கு மேல் ஊடக அலுவலகங்கள் மற்றும் ஊழியர்கள் நேரடியாகக் குறிவைக்கப்பட்டு துப்பாக்கிச் சூட்டிற்கும் மற்றும் குண்டுகளுக்கும் உள்ளாக்கப்படும் போது, ஆபத்து அதிகரிக்கின்றது. கொலை அல்லது குண்டுத் தாக்குதல் இடம் பெறும் இடத்திற்கு விஜயம் செய்தலும் ஆபத்தினைக் கொண்டு வரும். சோகத்தில் இருக்கும் கூட்டம் படப்பிடிப்பாளர்கள் மீது கோபபப்பட்டு, அல்லது தாக்குதற் காரர்களின் அடையாளத்தை மறைக்கும் பொருட்டுத் தாக்கலாம். சில வேலைகளில் ஓர் சம்பவத்தினை உருவாக்கி அதனால் அங்கு வரும் பொலிசாரையும், இராணுவத்தினரையும் நோக்கி தாக்குதல் இடம் பெறலாம். ஒரு குண்டினை வெடிக்க வைத்து, அதன் மூலம் பாதுகாப்புப் படையினரை வரவழைத்து, அதன் பின்னர் ஒரு பெரிய குண்டு வெடிக்க வைக்கப்படலாம். இதனால் பொலிசார், ஊடகவியலாளர்கள், வைத்தியர்கள் அனைவருமே இரண்டாம் முறை குண்டுத் தாக்குதல்களினால் ஆபத்திற்குள்ளாகின்றனர்.



**ஸ்ரீயந்த வல்பொல
புகைப்பட
ஊடகவியலாளர்
- த இந்து**

*முதலாவது சம்பவம் 1987 ஆரம்ப காலத்தில் "தேசிய சமாதான முன்னணி என்ற மத அமைப்பின் அமைதியான ஆர்பாட்டத்தினை ஆவணம் செய்து கொண்டிருக்கையில் மூன்று பொலிஸ் அதிகாரிகள் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டு புகைப்பட சுருளை என்னைக் கொண்டு பலவந்தமாக எடுத்தமையாகும்."*

*இரண்டாவது சம்பவம் 1987 ஜூலை மாதம் 27ம் திகதி இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு முதலாவது ஆர்ப்பாட்டம் புறக்கோட்டை மற்றும் மருதானையில் நடைபெற்ற போது புகைப்படம் எடுத்த சந்தர்ப்பத்தில் மருதானை பொலிசாரினால் கலகக்காரர் என கருதப்பட்டு இரு புகைப்பட கருவிகளுடன் கைது செய்யப்பட்டமையாகும்.*

*இரு புகைப்பட கருவிகளும் மற்றும் அதனுள் இருந்த புகைப்பட சுருள்கள் இரண்டும் பொலிசார் கையில் அகப்பட்டு கொண்டது.*

**45 ஆம் பக்கம்** ☞



*1999 டிசம்பர் மாதம் 11ஆம் திகதி மெக்சிகோ நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டமொன்றினை படம் பிடித்துக் கொண்டிருக்கையில் சுதந்திர புகைப்படப்பிடிப்பாளரான ஜுு ஆன் கஸ்ட்டிலோ கலகத் தடுப்புப் பொலிசாரின் தாக்குதலுக்கிலக்கானதுடன் அவரின் புகைப்பட உபகரணங்களும் பறிக்கப்பட்டன. குறைந்த பட்சம் மூன்று புகைப்படப்பிடிப்பாளர்களாவது இத் தாக்குதலில் காயமடைந்தனர்.*

**படம் : *AP/ David de la Paz***

**44 ஆம் பக்கத்திலிருந்து**

*அவர்கள் புகைப்படக் கருவிகள் இரண்டையும் எடுத்துக் கொண்ட பின்னர் ஊரடங்குச் சட்டத்தினை மீறிய குற்றத்திற்காக என் மீது வழக்கு தொடரப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டேன்.*

*நான் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. இவ் ஆரம்ப அனுபவங்கள் இரண்டும் சம்பவங்களைப் பதிவு செய்தலின் பொழுது புதிய விதிமுறைகள் மற்றும் தொழில்நுட்ப நுணுக்க முறைகளில் இருந்து நான் தூண்டப்பட்டேன்.*

*மோதல்கள் அதிகரிக்கும் சரியான இடங்கள் தொடர்பாக சிறந்த விளக்கத்துடன் இருத்தல், அதற்காக தொலைதூர புகைப்படம் எடுத்தல் போன்றவற்றை அருகில் வைத்துக் கொள்ளல், பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையில் இருப்பதை தவிர்த்துக் கொள்ளல், பாதுகாப்பு அதிகாரிகளுக்கு தொந்தரவுகளை ஏற்படுத்தவும், கைது செய்யப்படுவதற்கும் ஏற்ற விதத்தில் அண்மைய தூரத்தில் இல்லாதிருத்தல், ஊர்வலங்கள், எதிர்ப்புப் பாத யாத்திரைகள் போன்றவைகளின் பங்குதாரர் அல்லாமல் புகைப்பட ஊடகக் கண்காணிப்பாளராக இருத்தல், மோதலொன்றின் சம்பவமொன்றில் எனது பத்திரிகைக்குத் தேவையான அளவு புகைப்படங்கள் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் அவ்விடத்தில் இறுதி தருணம் வரை தங்கியிருக்காது இருத்தல், இயன்றளவு வேகத்தில் அவ்விடத்தில் இருந்து விலகிச் செல்லல் போன்றவை அவற்றில் சிலவாகும். இவ்வாறான பாதுகாப்பு உபாயமுறைகள் காரணமாகக் குண்டுகளில் இருந்து நான் பாதுகாக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகமாகும்.*

# ஊடக சுதந்திரமும் உயிர் வாழ்வதற்கான உரிமையும் - சுனந்த தேசப்பிரிய



*அன்றைய தினம் அதிர்ஷ்ட-வசமாக நாம் உயிர் தப்பினோம். பல காரணங்கள் ஒன்றிணைந்-தமையால் சில வேளை அன்றைய தினம் பாரிய ஆபத்திற்கு முகம் கொடுப்பதற்கு வாய்ப்பிருந்தது. எவ்வாறாயினும் அன்றைய தினம் தாக்குதலுக்-குள்ளானதால் நிரந்தரமான முதுகு வலியொன்று எனக்கு உரித்தானது.*

*ஊடகவியலாளர்களின் உயிர் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச வழிகாட்டல்களை வாசிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்த பொழுது நான் விளங்கிக் கொண்டதாவது : ஆபத்தான சூழ்நிலை ஒன்று வருவதற்கு முன் மிகக் கவனத்துடன் மேற்-கொள்ளப்பட வேண்டிய பாது-காப்பு நடவடிக்கைகள் இருக்கின்-றன என்பதாகும். ஆபத்தான சூழ்நிலையில் தொழில் கடமையில் ஈடுபட்டுக் கொண்-டிருக்கையில் உயிர் பாதுகாப்பு தொடர்பாக விளக்கம் இருந்திருப்-பின் எமக்கு அக் குண்டர்களிடம் அகப்பட்டுக் கொள்ளாமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்திருக்கும்.*

வாகனத்தில் நாங்கள் நால்வரே இருந்தோம். நான் உட்பட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக செயற்பாட்டாளரொருவர். அப்பொழுது நான் வார இறுதியில் பிரசுரமாகும் மாற்றுக் கருத்துக்களை கொண்ட பத்திரிகையான "யுக்திய" பத்திரிகையின் ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

அது 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதமாகும். அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. 1994 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கத்திற்கும் மற்றும், விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஆரம்பமான சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து இரு தரப்பினரும் பாரியளவிலான யுத்தமொன்றிற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். அப்பொழுது யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. மீண்டும் யாழ்ப்பாணத்தின் பலத்தை கைப்பற்றிக் கொள்வதே அரசாங்கத்தின் இலக்காக இருந்தது.

இவற்றுக்கிடையில் இலங்கையில் சமாதானம் மற்றும் நல்லாட்சி தொடர்பாகக் கரிசனை கொண்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பொன்றின் வருடாந்த மகாநாடொன்று பெந்தர ஹோட்டலில் மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம் மாநாட்டிற்கு பல வெளிநாட்டவர்களும் வருகை தந்திருந்தனர். எவ்வாறாயினும் விடயத்தை தவறாக விளங்கிக் கொண்ட நபர்களினால் நாட்டில் வேர் விட்டுக் கொண்டிருந்த யுத்த சூழலின் கீழ் அம் மாநாட்டிற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன. மாநாட்டினை நடத்த முடியாதளவிற்கு பிரதேசத்தில் குண்டர்கள் தூண்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் இனத் துரோகிகளாக சித்தரிக்கப்பட்டனர். கலகக்காரர்களுக்கு அரசியல் ரீதியிலான கட்டளைகள் கிடைக்கப் பெறுவதாகவும் தெரியக் கூடியதாய் இருந்தது. அரச ஊடகம் மாநாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின் கசையடிக்காரர்களாக இருந்தது.

நாம் நால்வரும் அவ் ஆர்ப்பாட்டத்தினை பதிவு செய்வதற்காக அங்கு சென்று கொண்டிருந்தோம். நாம் ஊடகவியலாளர்கள் என்பதனால் எமக்கு பாதிப்புக்கள் ஏற்படாதெனக் கருதினோம். எமது வாகனம் ஹோட்டல் பூமியை நெருங்கிய போது ஹோட்டலுக்கு அருகில் குழுமியிருந்தவர்கள் கலகத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். வாகனத்தில் வெளிநாட்டவர்கள் இருந்தமையினால் நிலைமை மேலும் மோசமடைந்தது. ஹோட்டலில் காவலாளர்கள் இல்லாதிருப்பின் குண்டர்கள் ஹோட்டலிற்குள் நுழைவதற்கு வாய்ப்பிருந்தது.

இந் நிலைமையினை பொலிசாருக்கு அறிவித்ததன் பின்னர் எமக்குப் பாதுகாப்பாக திரும்பிச் செல்ல முடியும் என ஆலோசனை கிடைத்தது. அவ்வாறாயினும் திரும்பி வந்த எமது வாகனத்தைப் பின் தொடர்ந்து கொண்டு குண்டர்கள் கோஷமெழுப்பிக் கொண்டு எம்மைத் துரத்தி வந்தனர். அவர்கள் நான் "யுக்திய" பத்திாகையின் ஆசிரியர் என்பதனை இனங்கண்டு கொண்டனர். "யுக்திய" பத்திரிகை யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டவொரு பத்திரிகையாகும்.

துரதிஷ்டவசமாக நீண்ட தூரம் செல்வதற்கு முன்னர் புகையிரதக் கடவையை மூடியிருந்த கதவு எமது வண்டியை நிறுத்தியது. கோஷங்களை எழுப்பிக் கொண்டு எம்மைப் பின் தொடர்ந்து வந்த போரை ஆதரிக்கும் குண்டர்கள் எமது வாகனத்தின் கதவினை பலவந்தமாகத் திறந்தனர். வாகனத்தின் முன் புறக் கண்ணாடி தூளாகும் வரை அடித்து நொறுக்கினர். ஒரு கணப்பொழுதில் நடுவீதியில் இருந்த குண்டர்களுக்கு மத்தியில் நான் அகப்பட்டுக் கொண்டேன். என்னை வெளியில் இழுத்தெடுத்து நாலா பக்கமும் இருந்து என் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர்.

எமது வாகனம் பாலமொன்றின் மீதே நிறுத்தப்பட்டது. தாக்குதலுக்கு இலக்காகிய என்னைத் தூக்கி ஆற்றில் போடுவதற்கு குண்டர்கள் முயற்சி செய்கையில் ரயில் கடவை கதவு திறக்கப்பட்டது. ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த இருவரும் வாகனத்தில் தொங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் பாரிய தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர். எனது மற்றைய சகாவுக்கும் எனக்கு நேர்ந்த கதியே நேர்ந்திருந்தது.

அன்றைய தினம் அதிர்ஷ்டவசமாக நாம் உயிர் தப்பினோம். பல காரணங்கள் ஒன்றிணைந்த காரணத்தினால் சில வேளை அன்றைய தினம் பாரிய ஆபத்திற்கு முகம் கொடுப்பதற்கு வாய்ப்பிருந்தது. எவ்வாறாயினும் அன்று தாக்குதலுக்குள்ளானதால் நிரந்தரமான முதுகு வலியொன்று எனக்கு உரித்தானது.

ஊடகவியலாளர்களின் உயிர்ப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச வழிகாட்டல்களை வாசிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்த பொழுது ஆபத்தான சூழ்நிலை ஒன்று வருவதற்கு முன் மிகக் கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் இருக்கின்றன என்று நான் விளங்கிக் கொண்டேன். ஆபத்தான சூழ்நிலையில் தொழில் புரியும் போது உயிர்ப் பாதுகாப்பு தொடர்பாக விளக்கம் இருந்திருப்பின் எமக்கு அக் குண்டர்களிடம் சிக்காமல் இருப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்திருக்கும். சில வேளைகளில் வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்வதற்காவது அவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பமிருந்தது. ஆனால் எம்மில் யாருக்கும் அவ்வாறான விளக்கம் இருக்கவில்லை.

கடந்த காலங்களில் சட்டத்ததை கையில் எடுத்துக் கொண்ட குண்டர் கோஷ்டிகள் மூலம் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தவும், அச்சுறுத்தல்களை மேற்கொள்ளவும் அவர்களின் புகைப்படக் கருவிகளில்




*1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி எதிர்க்கட்சியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றினை செய்தி சேகரிக்கச் சென்ற புகைப்பட ஊடகவியலாளர்கள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் மூலம் தாக்கப்பட்டு புகைப்பட உபகரணங்களும் பறிக்கப்பட்டன. அவ் தாக்குதலை தமது பகைப்படக் கருவியில் பதிவு செய்து கொள்வதற்கு "ராவய" பத்திரிகையின் அஜித் செனவிரட்னவிற்கு மட்டுமே முடிந்தது. மேலே காட்டப்படுவது அப் புகைப்படமாகும்.*

பதிவு செய்யப்பட்ட காட்சிகளை பலவந்தமாக அழித்து விடுதல் தொடர்பான சம்பவங்கள் பல சந்தர்ப்பங்களில் பதிவாகி இருந்தன.

ஊடகவியலாளர்களாகிய நாம் எமது தொழிலை இயன்றளவு சிறந்ததாகவும் துரிதமாகவும் செய்தல் வேண்டும். அதே போல் எமக்குப் பல சந்தர்ப்பங்களில் ஆபத்தான சூழ்நிலைகளுக்கு மத்தியில் தகவல்களை தேடுவதற்கும் மற்றும் பதிவு செய்வதற்கும் நேரிடும். ஏதாவதொரு சம்பவத்தினை பதிவு செய்ய வேண்டி ஏற்படின் அல்லது கட்டளைப் பணி பிறப்பிக்கப்பட்டவுடன் அது ஆபத்தானதா இல்லையா என்பது பற்றி நாம் பெரிதாகக் கவனம் எடுப்பதில்லை.

அது யுத்த பூமியில் இருந்து பதிவு செய்தலோ அல்லது குண்டு வெடிப்பு ஒன்றாகவும் இருக்கலாம். கலகக்காரக் கூட்டம் ஒன்றாகவும் இருக்கலாம். அமைதியாக மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டம் ஒன்றின் மீதான பொலிஸ் தாக்குதலாகவும் இருக்கலாம். ஆயுததாரிக் குழுக்கள் ஒன்றின் ஆதிபத்தியத்திற்காக தாக்குதல் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பிரதேசத்தில் இடம்பெறும் மர்மமான கொலைகளைப் பதிவு செய்வதாகவும் இருக்கலாம். பொதுத் தேர்தல் ஒன்றின் போது இடம்பெறும் வன்முறையைப் பதிவு செய்வதாகவும் இருக்கலாம்.

இவ்வாறான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இலங்கையில் நாம் செய்திகளைப் பதிவு செய்ய நேரிடும். நாம் அவ்வாறான சந்தர்ப்பத்தை தட்டிக் கழிக்க முடியாது. அவ்வாறு செய்யப்படின் மக்களுக்காகத் தகவல்களை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பில் இருந்து நாம் விலகிக் கொள்வதாக அமையும்.

மறுபுறத்தில் எமது அரசியல் மற்றும் சமூகச் சூழலும் துரதிஷ்ட வசமாக வன்முறையை நோக்கி மாறிக் கொண்டு இருக்கின்றது. அதன் மூலம் நிலைமை மேலும் மோசமடையும் அடாவடித் தனங்களுக்கு இசைவான அரசியல்வாதிகள் சட்டத்தை கவனத்தில் கொள்ளாது குழப்பங்களை ஏற்படுத்தும் சமூக குழுக்களும் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகித்தனர். மிகவும் மோசமான நிலைமையானது அவ்வாறான நபர்கள் பல சந்தர்ப்பங்களில் பொலிசார் பல வழிகள் மூலம் தன் பக்கம் சார்ந்து கொள்ளச் செய்தமையாகும். 1990ம் ஆண்டில் ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்சா கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட போது அது முழு சமூகத்தினையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அச்சம்பவம் இலங்கையில் ஊடகத்துறை மீதான ஊடகவியலாளர்களை கொலை செய்தல் என்பதாகும் என்ற கருத்து உலகம் முழுவதும் பிரசித்தமானது. அப்பொழுது நாட்டிற்குள்ளும் பாரிய எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன. ஆனாலும் அதன் பின்னர் இந்நாட்டில் பல ஊடகவியலாளருக்கு தமது தொழில் காரணமாக உயிரை அர்ப்பணிக்க நேரிட்டது.

ரிச்சட் டி சொய்சாவிற்குப் பின்னர் மிகப் பிரபல்யமான படுகொலை. “சடன (Satana)” பத்திரிகையின் ஆசிரியரான ரோஹன குமாரவின் படுகொலை ஆகும். அதன் பின்னர் நிமலராஜன் கொலை செய்யப்பட்டார். யாழ்ப்பாணத்தில் நிமலராஜன் கொலை செய்யப்பட்ட பின்னர் மட்டக்களப்பில் நடேசன் கொலை செய்யப்பட்டார். அந்தளவிற்கு பிரசித்தம் அடையாத ஆனாலும் பல ஊடகவியலாளர்கள் கடந்த காலங்களில் தமது தொழில் நிமித்தம் உயிரிழக்க நேரிட்டது. ரமேஷ் குமார், பாலநடராஜா போன்ற மேலும் பல ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

ஊடகவியலாளர் ரிச்சட் டி சொய்சாவின் படுகொலையினைப் போல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையும் எம் முன் உள்ளது. 2005 ஏப்ரல் 28ஆம் திகதி இரவு கடத்திச் செல்லப்பட்ட சிவராம் அன்றிரவே கொலை செய்யப்பட்டார். சிவராம் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு இலக்காகியிருந்த ஓர் ஊடகவியலாளராவார். அவருக்கு அரசாங்கத்திடமிருந்தும் ஆயுத பாணிகளான அரசியல் குழுக்களிடமிருந்தும் அச்சுறுத்தல்கள் இருந்தன.

அவர் இரவு 10.30 மணியளவிலே கடத்திச் செல்லப்பட்டார். அச் சந்தர்ப்பத்தில் அவர் தனியாகவே இருந்தார். தமது கையடக்கத் தொலைபேசிக்கு கிடைத்த அழைப்பையடுத்து தமது நண்பரொருவரிடமிருந்து சற்றுத் தொலைவிற்குச் சென்றுள்ளார். அச்சந்தர்ப்பத்திலே அவர்

கடத்தப்பட்டார்.

நண்பரோடு இருக்கையில் கடத்தப்பட்டமையால் அது அம்பலமாகியது. சில சமயம் இருவருடனோ அல்லது மூவருடனோ ஒன்றாக இருந்திருந்தால் கடத்தலை தற்காலிகமாகவேனும் தடுத்திருக்க முடியும்.

ஆனால் இப் படுகொலைகள் தொடர்பாக சரியான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இதுவரையில் எந்தவொரு அரசாங்கமும் நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

நிமலராஜன் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியளவிற்கு அவருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் கோழைத்தனம் என அவர் நினைத்திருக்கலாம். சாதாரணமாக சரளமான வாழ்க்கையை வாழ்ந்த அவருக்கு அவ்வாறான வாழ்க்கை முறைக்கு மாறுவதற்கு மனம் இடமளிக்காது இருந்திருக்கக் கூடும். அக் கவனயீனம் காரணமாக தமது உயிரையே இழக்க நேரிட்டது. அதன் மூலம் தமிழ் ஊடகத் துறைக்கு மரண அடி ஒன்று விழுந்தது.

1980ம் ஆண்டு முதல் இந் நாட்டின் சமூக அரசியல் வாழ்க்கையில், கட்டாய அங்கமாக மாறியுள்ள ஆயுத ரீதியிலான அரசியல் எதிர்ப்புகளை காட்டுதல் மற்றும் கலகக்கார அரசியல் மூலம் பல ஊடகவியலாளர்கள் மற்றும் கலாசார செயற்பாட்டாளர்கள் பலி கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் பல பேரின் உயிர்கள் உயர்ந்த பட்சம் பாதுகாப்பு நடவடிக்கை அல்லது அவற்றை பெற்றுக் கொள்வதற்கான அறியாமை அல்லது கவனமற்ற தன்மை காரணமாகவே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க பல தடவை மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகளிலிருந்து உயிர் தப்பித்துக் கொண்ட இந்நாட்டின் முன்னணி ஊடகவியலாளராவார். ஒரு தடவை அவர் ஊடகவியலாளரான தனது மனைவியுடன் பயணித்த வாகனத்தை பலவந்தமாக நிறுத்திய அரசியல் குண்டர்கள் சிலர் அவர் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தனர். அவருடைய மனைவி லசந்தவிற்கு முன் பாய்ந்து தடுத்ததன் காரணமாக லசந்தவின் உயிர் காப்பாற்றப்பட்டது. எவ்வாறாயினும் குண்டர்களுக்கு அதிகளவு நேரம் வீதியில் இருக்க முடியாது போனமையினாலும் அவர் அன்று காப்பாற்றப்பட்டார். பின் ஒரு சந்தர்ப்பத்தில் அவருடைய இல்லத்தின் மீது துப்பாக்கிச் சூடும் நடத்தப்பட்டது.

அதேபோல் மரண அச்சுறுத்தலுக்குள்ளான அப்போது லங்காதீப பத்திரிகையின் பிரதி ஆசிரியரான ஆரியரத்ன தொம்பகாவத்தை வார நாட்களை அலுவலகத்தில் கழித்து விட்டு வார இறுதியில் தனது வீட்டிற்குச் சர்வதேச சமாதான கண்காணிப்பாளர்கள் இருவருடன் சென்றுள்ளார். அவர் அவ்விருவருடன் தங்கியிருந்த காரணத்தினால் மேலதிகப் பாதுகாப்பு கிடைத்தது. அரசியல் அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக ஊடக கட்டுப்பாடு அவசியம் என ஆயுதக் கிளர்ச்சி இயக்கங்கள் சிந்திக்கின்றன.

ஜனநாயக ரீதியாக முன்னிற்கின்ற சில அரசியல் கட்சிகளும் அவ்வாறு ஊடகக் கட்டுப்பாட்டை வைத்துக் கொள்வதற்கு பல உபாயங்களைக் கையாளுகின்றன. அதில் ஓர் உபாயமானது சுயாதீன அல்லது வேறு தரப்பிற்குச் சம்பந்தப்பட்டவர்கள் என தெரியும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக பலாத்காரத்தினையும் வன்முறையையும் பிரயோகித்தலாகும்.

இந்நாட்டின் அனேக ஊடகவியலாளர்கள் யுத்தம் காரணமாக உயிரிழக்கவில்லை. ஊடகக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் நோக்கில் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் காரணமாகவே உயிரிழந்துள்ளனர். இலங்கையின் இவ்வாறான அரசியல் குற்றங்கள் தொடர்பாக வெளிப்படையாகத் தெரியும் பயங்கரமான யதார்த்தம் குற்றத்திற்குத் தண்டனை கிடைக்காத சம்பிரதாயமாகும். இவ்விடயங்கள் சர்வதேச மனித உரிமை நிறுவனங்களிற்கு மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியும் அதற்கு எவ்வித தீர்வுகளும் கிடைக்கவில்லை.

சுதந்திர ஊடக அமைப்பின் அறிக்கைகளுக்கு ஏற்ப 1992 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் தாக்குதல்கள் 52 ஆகும். அப்படியாயின் ஒவ்வொரு வாரத்திற்கும் ஒன்று எனும் அடிப்படையில் இலங்கையில் பொது மக்களின் மனித உரிமைகளை மீறும் பிரதான நிறுவனம் பொலிஸ் நிலையமாகும். உடல் ரீதியாக சித்திரவதை செய்தலை இலங்கை பொலிஸ் கை விட முடியாத கொடுமையாகவுள்ளது. ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட விடயத்திலும் பொலிசார் ஒரு தடவையல்ல பல தடவைகள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

1996ஆம் ஆண்டு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த எதிர்ப்பு ஊர்வலமொன்றில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 11 புகைப்படப் பிடிப்பாளர்கள் மீது தாக்குதல் நடத்திய ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர் அவர்களது, புகைப்படக் கருவிகளையும் கைப்பற்றிக் கொண்டனர். அச் சம்பவத்தினை புகைப்படமெடுத்துக் கொண்டு தப்பிச் செல்வதற்கு ஒரு ஊடகவியலாளரால் மட்டுமே முடிந்தது. அது அதிர்ஷ்ட வசமானதாகும். அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ஆபத்தான சூழலை முன் கூட்டியே கண்காணிப்பதில் புகைப்படப் பிடிப்பாளர்கள் வெற்றியடைந்திருப்பார்களாயின் அக்குண்டர்களின் செயற்பாடுகளை அருமையாக காட்சிப்படுத்திக் கொண்டு அங்கிருந்து செல்வதற்கும் அல்லது தமது புகைப்படக் கருவிகளையும், புகைப்படச் சுருள்களையும் பாதுகாத்துக் கொள்வதற்கும் முடிந்திருக்கும்.

இன்றும் கூட பொலிசாரினால் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தொந்தரவுகள் இன்னும் குறைவடையவில்லை. 2004ஆம் ஆண்டு கொஸ்கொடையில் மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் ஆர்ப்பாட்டமொன்றினை பதிவு செய்து கொண்டிருந்த சில பிராந்திய ஊடகவியலாளர்கள் மீது கொஸ்கொடை பொலிசார் மிகக் கடுமையாக தாக்கியுள்ளனர். 2003ஆம் ஆண்டிலும் அவ்வாறானதொரு சம்பவம் வெள்ளவாயவிலும் இடம் பெற்றது.

தொடர்ந்து வன்முறைகள் இடம்பெறும் இந்நாட்டின் அரசியல் சூழ்நிலை ஊடகவியலாளர்களாகிய எம்மிடம் கோரும் ஒரு முக்கிய நிபந்தனை உயிர்பாதுகாப்புத் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல் வேண்டுமென்பதாகும். அது எமது உயிரை பாதுகாப்பதற்காக அல்ல. தொழிலை சரியாக மேற்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினாலேயாகும்.

2005 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் முதல் நாள் தொலைக்காட்சி சேவையென்றில் தயாரிப்புக் குழுவொன்று சிலாபம் மா ஓயா ஆற்றில் சட்டவிரோதமாக மண் அகழ்தல் பற்றிய சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்றிருந்தனர். பின்னர் பத்திரிகைகளில் வெளியிட்ட தகவல்களின் படி இம் மண் அகழ்தல் வியாபாரத்தினை பிரதேசத்தின் அரசியல்வாதிகள், பொலிஸ் மற்றும் பலம்வாய்ந்த சட்டவிரோத விற்பனையாளர்கள் ஆகியோருடன் இணைந்து மேற்கொண்டமை பாரிய குற்றமாகும்.

முன்னர் குறிப்பிட்ட தொலைக்காட்சி குழுவினர் தேவையான காட்சிகளை புகைப்படமெடுத்துச் செல்கையில் சட்டவிரோத விற்பனையாளர்களின் குண்டர்கள் இவர்களை சுற்றி வளைத்தனர். அவர்களே குழப்பமொன்றை ஏற்படுத்தினர். தொலைக்காட்சி புகைப்படக் கசட்டில் பதியப்பட்டிருந்தவற்றை சட்ட விரோதமான இயந்திரங்களைக் கொண்டு நடத்திச் சென்ற மண் அகழ்தல் காட்சிகளை பலவந்தமாக அழித்து விட்டனர். அவ்வாறு செய்வதற்கு இடமளிக்காதிருப்பின் நிலைமை மோசமடைவதற்கு வாய்ப்பிருந்தது.

எவ்வாறாயினும் தேவையான படக்காட்சித் தொகுதியை பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களால் முடிந்தது. அவை அவர்களின் திறமை காரணத்தினால் ஒளிபரப்பப்பட்டன. தேவையான ஊடகங்களும் இக் குற்றங்களை செய்தி அறிக்கையிடுவதற்கு அவசரப்பட்டன. அதிகாரிகளுக்கு மௌனமாக இருக்க முடியாமல் போனது மண் அகழ்விற்கு எதிராகப் பொது மக்கள் அபிப்பிராயம் ஏற்பட்டமையினாலாகும். இச் சம்பவத்தினுள் எமக்குள்ள தகவல் யாது? முரண்பாட்டு நிலைமையொன்றினை பதிவு செய்வதற்குச் செல்ல முன்னர் தேவையான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்தவதாகும். நிலைமை மோசமடைந்தால் மாற்றுவழிகளை மேற்கொள்வதை கவனத்திற் கொள்ளல். அனைத்தையும் விட தமது புகைப்படக் கசட்டுகளை பாதுகாத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை சிந்தித்தல். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நாம் பயன்படுத்தும் வார்த்தைகள் கூட முக்கிய இடத்தினை வகிக்கும். அதன் காரணமாகவே பயிற்சி தேவைப்படுகிறது.

2000ஆம் ஆண்டில் உரிய அனுமதியுடன் புத்தளம் பிரதேசத்தின் பாடசாலையொன்றினை புகைப்படமெடுத்துக் கொண்டிருந்த யங் ஏசியா தொலைக்காட்சி குழுவுக்கும் அவ்வாறானதொரு அனுபவத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்தது. சுனாமியினால் இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கல் தொடர்பாக ஆராய்வதற்காகப் பிரதமருடன் யாழ்ப்பாணம் சென்றிருந்த ஊடகவியலாளர்கள் குழுவினர் அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் அகப்பட்டுக் கொண்டனர். தாம் ஊடகவியலாளர்கள் எனத் தம்மை

இனங்காட்டிக் கொள்வதற்கு முடிந்தமையினால் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் நேரவில்லை.

சுனாமி கடற்கோள் அனர்த்தத்தின் பின்னர் ஏற்பட்ட சிக்கார்ந்த நிலைமைகளுக்கு மத்தியிலும் 2005 பெப்ரவரி மார்ச் மாதங்களில் யாழ்ப்பாண மக்கள் பல ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடலாயினர். இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை பதிவு செய்யச் சென்ற மூன்று நான்கு ஊடகவியலாளர்களுக்கு அரச இராணுவத்தினரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

ஆர்ப்பாட்டங்கள் குழப்பகரமான நிலைக்கு இட்டுச் செல்லும் பொழுது ஊடகவியலாளர்களையும் ஊர்வலக்காரர்களையும் பிரித்து அடையாளங் காண்தல் கடினமானதாகும். எமது ஊடகவியலாளர்கள் பல சந்தர்ப்பங்களில் ஊடக அடையாள அட்டை தெரியும் விதத்தில் அணிவதில்லை. பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஊடவியலாளர்கள் அணியும் மேலங்கியும் இல்லை. யாழ். ஊடகவியலாளர்கள் மீதான அரச இராணுவத்தினர் மேற்கொண்ட கெடுபிடிகளைக் கண்டித்து உரிய விசாரணைகளை சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்ட அறிக்கையில் தமது அடையாள அட்டை தெரியும் விதத்தில் அணியும் படி கோரியிருந்தது. பின்னர் யாழ். இராணுவத் தளபதி இதன் மூலமாக யாழ். ஊடகவியலாளர்களுடன் விசேட கலந்துரையாடலொன்றினை மேற் கொண்டார்.

இலங்கையில் நிலவுகின்ற வடக்கு கிழக்கு யுத்த நிலைமை காரணமாகவே இப்பொழுது தமிழ் ஆயுதக் குழுக்களுக்கிடையில் ஒருவரையொருவர் கொலை செய்து கொள்ளல் காரணமாகவோ, விசேடமாக வடக்கு கிழக்கில் சேவை செய்யும் ஊடகவியலாளர்கள் ஆபத்தான நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். மட்டக்களப்பில் ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் அந்நகரில் பணியில் ஈடுபட்டிருந்த பல ஊடகவியலாளர்களுக்கு பாதுகாப்புக் கோரி நகரைக் கைவிட்டுச் செல்ல வேண்டி ஏற்பட்டது.

2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வவுனியாவில் இராணுவ வீரர்கள் சிலருக்கு வெடி மருந்துகள் காரணமாக உடல் விஷமடைந்த சம்பவத்தினை பதிவு செய்ய வைத்தியசாலைக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவ அதிகாரியொருவரின் அச்சுறுத்தலுக்கிலக்கானார்கள். அவர் வன்னி ஊடகவியலாளர் சங்கத்திற்கு அறிவித்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டார். அவரது அறிக்கையின்படி அந்த இராணுவ வீரர்களுக்கு வெடி மருந்துகளை ருசி பார்க்குமாறு கட்டளையிடப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

முதலில் அச்சம்பவத்தினை மூடிமறைப்பதற்கு அதிகாரிகள் முயற்சி செய்துள்ளதுடன் பின்னர் அதன் பயிற்சியாளர் தற்கொலை செய்து கொண்டதன் காரணமாக அது பாரிய பிரச்சினை என உறுதிப்படுத்தப்பட்டது.

அச்சம்பவத்தினை அறிக்கையிடுவதற்கு ஊடகவியலாளர்கள் நடவடிக்கை எடுக்காதிருப்பின் உண்மை நிலைமை வெளிப்படாதிருப்பதற்கான சந்தர்ப்பம் இருந்திருக்கும். யுத்த வலயப் பகுதிகளில் சம்பவங்களை அறிக்கையிடல் மற்றும் அச்சந்தர்ப்பத்திலே பாதுகாப்பு தொடர்பாக கவனத்திற் கொள்ளலின்

முக்கியத்துவம் இதன் மூலம் எமக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஊடகவியலாளர்கள் மட்டுமல்ல ஊடக நிறுவனங்களையும் கட்டுப்படுத்துவதற்கு பயமுறுத்தலை பயன்படுத்துதல் இலங்கை வன்முறை அரசியல் கலாசாரங்களில் ஓர் அங்கமாகும். சடடே ரிவீவ், உதயன், லேக்ஹவுஸ், ராவய மறறும் திவயின பத்திரிகை அலுவலகம், சுவர்ணவாஹினி மற்றும் சிரச தொலைக்காட்சி நிலையம் பல சந்தர்ப்பங்களில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. யுக்திய பத்திரிகை மற்றும் அச்சகம் அழிக்கப்பட்டது.

யுக்திய பத்திரிகை அந்நிலைமைகளுக்கு மத்தியில் சர்வதேச சமாதான கண்காணிப்பாளர்கள் குழுவொன்றினை தமது அலுவலகத்தில் வைத்துக் கொண்டு பத்திரிகையை தொடர்ந்து நடத்திச் சென்றது.

ராவய பத்திரிகைக்கு தொடர்ச்சியாக விடுக்கப்படும் அவ்வாறான அச்சுறுத்தல்கள் காரணமாக அப் பத்திரிகை தமது அலுவலகத்தின் முன் அமைக்கப்பட்டிருந்த மதிலை அகற்றி சல்லடையிலான வேலியொன்றினை அமைத்தமைக்குக் காரணம் அம்மதிலுக்குப் பின் மறைந்து குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப் படலாம் என்ற காரணத்தினாலேயாகும்.

இவ் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இச்சம்பவங்களைக் கண்டித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஜனநாயக சமூகத்தினர் மத்தியில் சுதந்திர ஊடக இயக்கம் பிரசாரத்தினை மேற்கொண்டது. ஆனால் அது மட்டும் போதுமானதன்று. அவ்வாறான சந்தர்ப்பங்களை முன் கூட்டியே அறிந்து கொள்ளல், ஆபத்துக்களிலிருந்து விலகிக் கொள்வதற்கும் மற்றும் ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்கும் முயற்சி செய்தல் அத்தியாவசியமானதாகும்.

இந்நாட்டின் ஊடகவியலாளர்களுக்கு சம்பந்தப்பட்ட வகையில் சுதந்திர மற்றும் அமைதியான சூழலொன்றினுள் தமது தொழிலை நடத்திச் செல்வதற்கான சூழ்நிலை உருவாகும். என சிந்திக்கக் கூடிய நாளொன்றினை இதுவரை எண்ண முடியாதுள்ளது. அதன் காரணமாகவே நாம் எமது பாதுகாப்பு தொடர்பாக கவனத்திற் கொள்ளல் அவசியம்.



UNESCO

CPA
Centre for Policy Alternatives

reporters without borders

IFJ FIP IJF